வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 17.12.2022 சனிக்கிழமை இதழ் : 09 பக்கங்கள் : 16

## பிரபல தமிழ் வர்த்தகர் கடத்தப்பட்டு கொலை!

### தலைநகரில் பயங்கரம்



கொழும்பு, டிசெ. 17

பிரபல தமிழ் வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் கொழும்பில் இனந்தெரியாதோரால் கடத்தப் பட்டு - காயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஜனசக்தி குழுமத்தின் தலைவரான தினேஷ் ஷாப்டர் (வயது 52) கொல்லப்

11



## தொழிலதிபர் கொலை; விசாரணை வலையில் பிரபலம்!

கொழும்பு, டிசெ. 17

கடத்தப்பட்டு - காயப்பட்ட நிலையில் மீட்கப் பட்டு மரணமான தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் பிரைன் தோமஸ் பொலிஸாரின் விசாரணை வலைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

தினேஷ் ஷாப்டரிடமிருந்து பிரைன்

15

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் 6 மாதங்கள் தாமதிக்கலாம்?

14

# போரில் சரணடைந்த எழிலனை மன்றில் முன்னிலைப்படுத்துக!

### இராணுவத்தினருக்கு நீதிபதி உத்தரவு

வவுனியா, டிசெம்பர் 17

**இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் எழி லனை (சசிதரன்) அடுத்த வழக்கு விசாரணையின்போது மன்றில் முன்னிலைப் படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என்று வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.**

இறுதிப் போர் நடவடிக்கை யின்போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப் பட்டவர்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசி தரன் உள்ளிட்ட 12 குடும்பங்களை சேர்ந்தவர்கள் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந் தனர்.

இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றன. விசாரணைகளின் நிறைவில், அந்த நீதிமன்றம் வவுனியா மேல் நீதிமன் றுக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த

15

## இணைந்த வட, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கான அதிகாரம் என்ன?

### கேள்வி எழுப்புகிறார் நசீர் அஹமட்

கொழும்பு, டிசெ. 17

வடக்கு, கிழக்கு மாகா ணங்களை இணைத்து 13ஐ அமுல்படுத்தக் கோரும் தமிழ் தலைமை களும், அதே நிலைப் பாட்டிலுள்ள முஸ்லிம் தலைமையும் இணைந்த வடக்கு கிழக்கில் முஸ் லிம்களுக்கான அதிகாரப் பகிர்வு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள் ளார்.

இது தொடர் பில் அறிக்கை ஒன்றை வெளி

15

## இந்திய ரூபாயை இலங்கை வர்த்தகத்துக்கு பாவிக்கலாம்!

### அனுமதியளித்தது ரிசர்வ் வங்கி

புதுடில்லி, டிசெ. 17

'இந்திய ரூபாயை' பயன்படுத்தி இந்தியாவு டன் வர்த்தகம் செய்வதற் கான வாய்ப்பை இலங் கைக்கு வழங்க அந் நாட்டு மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை, தவிர ரஷ்யா, மொறீசி யஸ் நாடுகளும் இதே அங்கீகாரத்

15

## மீண்டும் அரசியல் கட்சிகளை சந்திக்கிறார் சொல்ஹெய்ம்



கொழும்பு, டிசெ. 17

இலங்கை வந்துள்ள நோர்வேயின் முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி யின் சர்வதேச காலநிலை ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் மனோ கணே சனை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தப் பேச்சின்போது, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடன் மலையக மக்களும் ஒரே நாட் டுக்குள் - பிரிய முடியாத இலங் கைக்குள் வாழும்

15

## புது வருடத்தில் புதிய கூட்டணி சுதந்திரக் கட்சி அறிவிக்கும்!

கொழும்பு, டிசெ. 17

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஏனையக் கட்சிகளு டன் கூட்டணி அமைப் பதற்கான கலந்துரை யாடல்கள் நிறைவடைந் துள்ளன என்று அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கூட்டணி தொடர்பான அறி விப்பு வெளியா கும் நாளில் எம்

15

## நான் சொன்னது கட்சி முடிவையே ஒன்றும் தெரியாமல் கூறவில்லை!

### சுமந்திரன் எம். பிக்கு கஜதீபன் பதில்

யாழ்ப்பாணம், டிசெ. 17

"உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுவது பற்றி நான் தெரிவித்த கருத்துக்கள், எமது கட்சியின் முடிவுகள். ஒன்றும் தெரியாமல் சொன்ன விடயங்கள் அல்ல அவை. அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின் வெளியிடப் பட்ட கருத்துக்கள் அவை என்று புளொட் கட்சி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ப. கஜதீபன்

15

## பரந்த கூட்டணி அமைக்க 15 கட்சிகளுடன் பேச்சு!

### மொட்டுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஈடுபட் டுள்ளது என அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலை

15

## காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிய தாய் உயிரிழப்பு

5

## கடலட்டை பண்ணைகளை உடனடியாக அகற்றுங்கள்!

### யாழ்ப்பாணத்தில் மக்கள் போராட்டம்

6

## இப்படியும் நடக்கிறது...!

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சியாக நடந்துமுடிந்த அனைத்துக் கட்சிப் பேச்சில் முக்கிய தரப்பாகக் கலந்துகொண்ட கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேசிய விடயம் ஒன்றுதான் இப்போது தெற்கில் முக்கிய பேசுபொருளாகியிருக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் குறித்து தனது பேச்சில் குறிப்பிட்ட சம்பந்தன், தனக்கு முன்னால் இருந்த மகிந்த ராஜபக்ஷவை கைநீட்டி, உரத்த குரலில், “சரணடைந்தவர்கள் அனைவரையும் நீங்கள்தான் கொன்றுவிட்டீர்கள். அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்”, என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவருமே கொல்லப்பட்டு விட்டனர் என்று சம்பந்தன் தெரிவித்திருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைக் கோபப்படுத்தியிருக்கின்றது.

அது அல்ல நாம் இங்கே சொல்லவருவது. பேச்சுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தபோதே அவர் இன்றைய நிலையில் சில அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் சில விடயங்களை செய்யலாம் என்ற நம்பிக்கை பலரிடமும் உண்டு. அதற்காக சமஷ்டியை பெற்றுவிடமுடியும் என்று துளியளவு நம்பிக்கைகூட இந்த ஊர்க்குருவிக்கு இல்லை. ஆனாலும் ஆகக்குறைந்தது இன்றைய அரசியலமைப்பில் இருக்கும் விடயங்களை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற தமிழ் கட்சிகளின் கோரிக்கைக்கு தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது.

ஆனால், அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை என்றாலும் பெற்றால்தான் செய்ய முடியும் என்பதை அறியாதவரல்ல சம்பந்தன். அப்படியிருக்கும்போது, யாருடைய தயவில் ரணில் ஆட்சியில் இருக்கிறாரோ அவரை நீட்டி கைகளைக் காட்டி நீ கொலைகாரன் என்று சொன்னால் எந்த மனிதனுக்கும் அது கோபத்தையே ஏற்படுத்தும். ஏற்கனவே, பதின்மூன்று பிளஸுக்கும் தான் தயார் என்று சொன்ன ஒருவரை கோபப்படுத்துவதன்மூலம் எதனையும் பெற முடியாது என்பது சாதாரண அறிவுள்ள ஒருவருக்கே தெரியும். இதற்கெல்லாம் அரசியல் இராஜதந்திரம் என்பதுகூட தேவையில்லை.

கடந்த தேர்தலில் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பெருந்தோல்விக்குக் காரணம் என்ன என்பது குறித்து பல தடவைகள் இந்த பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றோம். ரணில் பிரதமராக இருந்தபோது - அவரைக் காப்பாற்றுவதே முதல் வேலையாக - முதல் கடமையாக கருதிய கூட்டமைப்பு, இப்போது மீண்டும் அவர் ஜனாதிபதியாக இருக்கும்போது அவரின் பேச்சுகளுக்கு யாரை முன்நிறுத்துகின்றது என்பதை பார்க்கும்போது மீண்டும் ஒரு பெரிய பின்னடைவை சந்திக்கவிருக்கின்றது என்று எச்சரிக்காமல் இருக்கமுடியவில்லை.

ஒவ்வொரு தடவையும் ஆட்சியில் இருப்பவர்களோடு சேர்ந்துகொண்டு எதிரணியினரோடு மோதுவதும் பின்னர், ஆட்சியிலிருந்து அவர் போனபின்னர் அவரோடு மோதுவதும் என்று மாறிமாறி தமது சுய விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்துவதால் இனத்துக்கு எதனையும் செய்துவிடமுடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நடந்து முடிந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதைத் தெட்டத் தெளிவாக சொல்லியிருக்கின்றார். பொதுஜன பெரமுன பதின்மூன்று பிளஸ் என்று சொன்னாலும் அதுவும் ஒற்றையாட்சிக்குள்தான் என்பது ஆய்வுக்கு உரியதல்ல.

இந்த வேளையில், ஆட்சியில் இருப்பவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற வகையில், நமது கோரிக்கைகளை முன்வைத்து காலத்தைக் கடத்துவதற்கு அனுமதிப்பதை விடுத்து, உடனடியாக செய்யக்கூடிய விடயங்களை செய்து அதன்மூலம் பயன்பெறுவதுதான் புத்திசாலித்தனமானது.!

**- ஊர்க்குருவி**

# வயோதிப தம்பதியை தாக்கி பணம், நகைகள் கொள்ளை!

மன்னார், டிசெ. 17

மன்னார் - நானாட்டான் - உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியை தாக்கி 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 30 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதியரின் வீட்டினுள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் கூரை ஓடுகளை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

மூன்று கொள்ளையர்கள் வீட்டினுள் நுழைந்த நிலையில் ஆயுதங்களால் தம்பதியரை சரமாரியாக தாக்கி பணம் மற்றும் தாலிக்கொடி உட்பட 30 பவுணுக்கு மேற்பட்ட நகைகளை கொள்ளையிட்டு சென்றனர்.

பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவ இடத்துக்கு சென்ற முருங்கன் பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவினர் முதல் கட்ட விசாரணைகளை மேற்கொண்டு பார்வையிட்ட பின் முருங்கன் பொலிஸார் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# ஆயிரம் பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகள்!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

ஆயிரம் பாடசாலைகளுக்கு இணையத்தள வசதியை வழங்குவதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் 100 கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வியை டிஜிற்றல் மயமாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக சிறீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

கல்வி நிர்வாகத்தை மறுசீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ஒன்பது மாகாணங்களில் தற்போதுள்ள 100 கல்வி வலயங்கள் 120 வலயங்களாக விரிவுபடுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய வலயங்களின் வரைபடம் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது, மேலும் இது ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் எதிர்கொள்ளும் நிர்வாக சிக்கல்களைத் தீர்ப்பதை எளிதாக்கும். மேலும், ஒவ்வொரு பிரதேசத்திலும் தற்போது உள்ள பிரதேச அலுவலகங்களுக்குப் பதிலாக பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஸ்தாபிக்கப்படும் எனவும், தற்போதுள்ள 312 பிரதேச அலுவலகங்களுக்குப் பதிலாக 550 பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளை மேற்பார்வை செய்வதே பாடசாலை அபிவிருத்திச் சபையின் பிரதான கடமை என அவர் குறிப்பிட்டார். பல்வேறு பாடசாலைகளுக்கிடையில் வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் இது நிறைவேற்றப்படுவதாக அமைச்சர் வலியுறுத்தினார். அமைச்சரின் கூற்றுப்படி, தற்போது இயங்கி வரும் 100 வலய அலுவலகங்களில் 86 கணினி வள மையங்கள் உள்ளன, மேலும் 14 நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் 100 கணினி மையங்களும் அடுத்தாண்டு முதல் காலாண்டில் நிறைவு செய்யப்படும் என்றும் கூறினார்.

(ஐ)

# டி. பி. எஸ். ஜெயராஜுக்கு டி. ஆர். விஜயவர்த்தன விருது

கொழும்பு, டிசெ. 17

மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி. பி. எஸ். ஜெயராஜ் முன்னோடிகள் மற்றும் பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக டி. ஆர். விஜயவர்த்தன விருதைப் பெற்றுள்ளார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மவுண்ட்லவேனியா ஹோட்டலில் நடைபெற்றபோதே அவருக்கான இந்த விருது வழங்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வெளியாகும் வீரகேசரி நாளிதழின் அலுவலக நிருபராக 1977 ஆம் ஆண்டு பத்திரிகைத்துறையில் பிரவேசித்த ஜெயராஜ் 1981 ஆம் ஆண்டு ‘த ஐலண்ட்’ பத்திரிகையில் இணைந்தார். சென்னையில் இருந்து வெளியாகும் பிரபலமான ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் மற்றும் ‘ஃபுரொண்ட்லைன்’ சஞ்சிகையின் கொழும்பு நிருபராகவும பணியாற்றிய அவர் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்கான நீய்மன் ஃபெலோஷிப் பெற்று சென்ற பிறகு அங்கிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தார்.

கனடாவில் ஜெயராஜ் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை பத்திரிகைகளில் மூன்று தசாப்தங்களாக பத்திகளை எழுதிவருகிறார். அண்மைக்காலமாக அவர் டெய்லி மிரர் மற்றும் பினான்சியல் ரைம்ஸ் பத்திரிகைகளில் கிரமமாக எழுதிவருகிறார்.

ரொறண்டோவில் வசிக்கும் ஜெயராஜின் சார்பில் அவருக்கான விருதை டெயிலி மிறர் பத்திரிகையின் இணை ஆசிரியர் சுசித்த பெர்னாண்டோ இலங்கை பத்திரிகைகள் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் விஜேவர்த்தனவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

‘லேக் ஹவுஸ்’ என்று பொதுவில் அறியப்பட்ட அசோசியேட்ட் நியூஸ் பேப்பேர்ஸ் லிமிட்டெட்டின் ஸ்தாபகரான டி. ஆர். விஜயவர்த்தனவின் நினைவாக இந்த வருது இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ)

## மகளிர் விவகார அமைச்சு ஆலோசனை கோருகின்றது!

யாழ்ப்பாணம், டிசெ. 17

‘வடக்கு மாகாணத்தில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி’ எனும் கருப்பொருளில் எதிர்கால கொள்கை வகுத்தலுக்கும் திட்டமிடலுக்கும் மற்றும் மாகாண அபிவிருத்தியை நிலைநாட்டுவதற்கான பெறுமதியான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அனுபவம்சார் - அறிவுசார் சமூகத்திடமிருந்து வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு கேட்டுள்ளது.

இந்த ஆலோசனையில் பிரச்னைகளை அடையாளப்படுத்துவதுடன், அவற்றுக்கு ஆக்கபூர்வமான நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுகளையும் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை, மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், இல. 04, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடகவோ அல்லது npminwa@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு கேட்டுள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
17.12.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவருமில்லை?

காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் நீங்கள் கொன்றுவிட்டீர்களென்று சம்பந்தன் சர்வகட்சி கூட்டத்தில் தெரிவித்திருந்தார். அந்தக் கூட்டத்திலிருந்த சிங்கள கட்சிகளின் தலைவர்கள் எவருமே சம்பந்தனது கருத்தை மறுதலிக்கவில்லை - எவருமே ஆட்சேபிக்கவுமில்லை. யுத்தத்தை வெற்றிகொண்ட மகிந்த ராஜபக்ஷவும் எதுவும் பேசவில்லை. அனைவரின் மௌனமும் சம்மதத்தின் அறிகுறியாகும். ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் இது ஆச்சரியமான கருத்தல்ல. ஏனெனில், அவர் ஏற்கனவே - யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவருமே உயிருடன் இருப்பதற்கான வாய்ப்பில்லை என்று தெரிவித்திருந்தார். அவ்வாறாயின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான பதில் என்ன?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்தும் அவர்களுக்கான நீதியை கோரி வருகின்றனர். ஆனால், அரசாங்கமோ இதற்கு தெளிவானதொரு நிலைப்பாட்டை முன்வைக்க முடியாமல் பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் இல்லையென்றால் அடுத்தது என்னவென்னும் கேள்விக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். இந்த நிலையில், இறுதிப் போரின் விவரங்களை அறிந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியை நாடுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களாகிவிட்ட நிலையிலும்கூட தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் எவரிடமும் முழுமையான தகவல்கள் இல்லை. ஒவ்வொருவரிடமுள்ள தகவல்களை ஒரு பொதுத் தளத்துக்குக் கொண்டுசேர்க்கவும் எவரும் முயற்சிக்கவுமில்லை. இந்த நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்பு ஒன்று பணியில் அமர்த்தப்படுமாயின் அவர்கள் அனைத்தையும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிப்பார்கள்.

ஜே. வி. பி. கிளர்ச்சியின்போது, ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அதற்கான எந்தவொரு விசாரணையும் இந்த நாட்டில் இடம்பெறவில்லை. அதனை இப்போது ஜே. வி. பியினர்கூட மறந்துவிட்டனர். காலத்தை இழுத்தடித்துக் கொண்டு செல்லும்போது, ஒரு கட்டத்தில் அனைத்தும் மறக்கப்பட்டுவிடும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஈழ யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தையும் அவ்வாறானதோர் அணுகுமுறையில்தான் அரசாங்கம் கையாள முயற்சிக்கின்றது. குறிப்பிட்டளவு நஷ்டஈட்டைக் கொடுத்து இந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளியிடவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இடம்பெறும் விடயங்களை உற்றுநோக்கினால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியும் இறுதியில் காணாமல் ஆகிவிடுவதற்கான சூழலே தெரிகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களைத் தவிர வேறு எவரும் இதில் தீவிரமான அக்கறையுடன் இருப்பதாகவும் தெரியவில்லை. அரசியல் கட்சிகளை பொறுத்தவரையில் அவ்வப்போது பாராளுமன்றத்தில் சத்தம் போடுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு விடயமாகவே இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தால் அதன் பொறுப்பை சாதாரணமாக தட்டிக்கழித்துக் கொண்டு செல்ல முடிகின்றதென்றால், இது அரசாங்கத்தின் பிரச்னை மட்டுமல்ல. இது சர்வதேச பொறிமுறையிலுள்ள பிரச்னையுமாகும். சர்வதேச பொறிமுறைகளிலுள்ள பலவீனங்களையே அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

# தேசிய உற்பத்தி திறன் போட்டியில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம்!



கொழும்பு, டிசெ. 17

தேசிய உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியாக யாழ். மாவட்ட செயலகம் முதலிடத்தை பெற்றுள்ளது.

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் அரச திணைக்களங்களுக்கிடையே 2020 ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற தேசிய உற்பத்தித் திறன் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இலங்கையின் பிரதமர் தினேஷ் குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் தேசிய ரீதியாக முதலிடத்தை பெற்றுக்கொண்டமைக்கான தேசிய விருதினை மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பெற்றுக்கொண்டார். (அ)

# இராணுவச் சீருடை அணிந்து திருட்டில் ஈடுபட்ட நபர் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சி பூநகரி இரணைமாதா நகரில் இராணுவத்தின் சீருடைக்கு ஒத்த ஆடையணிந்து தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கிராம மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இரணைமாதாநகர் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு அதிகாலைவேளை நுழைந்த குறித்த நபர் வீட்டிலிருந்து சங்கிலி மற்றும் காப்பு போன்றவற்றை திருடிக் கொண்டு வெளியேறிய போது வீட்டு உரிமையாளரால் மடக்கி பிடிக்கப்பட்டார்.

இதன்போது திருடன் தான் கொண்டு வந்த கத்தியால் வீட்டு உரிமையாளரின் முகத்தில் வெட்டிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட சுக்குரல் காரணமாக அயலவர்களும் ஒன்று சேர்ந்து திருடனை மடக்கி பிடித்துள்ளனர்.

பிடிபட்ட திருடன் இராணுவ சீருடைக்கு ஒத்த உடை அணிந்திருந்ததோடு, முகமூடியும் அணிந்திருந்துள்ளார். அத்தோடு அவரிடம் கூரிய கத்தி ஒன்றும் காணப்பட்டுள்ளது.

மேலும் திருடப்பட்ட சங்கிலி மற்றும் காப்பு என்பவற்றை மீட்டெடுத்ததோடு, அவரிடம் இருந்து கத்தியினை பறித்த ஊர் மக்கள் குறித்த நபரை முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது வெட்டுக் காயங்களுக்குள்ளான வீட்டு உரிமையாளர் முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது சிறுமி ஒருவரும் காயங்களுக்குள்ளானார். (அ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தி பணிகள் நிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 17

வடக்கு, கிழக்கு மற்றும் மேல், ஊவா ஆகிய நான்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தி பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சில வீதிகளை போக்குவரத்து மேற்கொள்வதற்கு ஏற்றால்போல அபிவிருத்திக்கு மேற்கொள்ளவதாகவும் ஐ ரோட் திட்டப்பணிகள் சிலவற்றை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆசிய அபிவிருத்தியின் கடன் நிதியானது சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்தும் உடன்பாடு உறுதியாக கிடைக்கும் வரை அந்நிதி மூலம் நடைபெற்ற ஐ ரோட் திட்ட வீதி புனரமைப்புப்பணிகள் சிலவற்றை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சில வீதிகள் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் மாத்திரம் சீரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள உடன்படிக்கை பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி மீள வழங்க உடன்பாடு காலத்தை பொறுத்துத் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 17 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 02
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**

இன்று கோயிலுக்கு செல்வீர்கள். செயலில் உற்சாகம் இருக்கும். உறவினர் ஒருவரால் ஏற்பட்ட சங்கடம் மறையும். பொருளாதார நிலை உயரும். இன்று மேற்கொண்ட முயற்சி பலிக்கும்.

**இடபம்**

விருப்பம் நிறைவேறும். உறவினர் ஒருவரால் உங்கள் தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். இன்றைய முயற்சி தள்ளிப் போகும்.

**மிதுனம்**

புதிய முயற்சி இன்று வேண்டாம். நண்பர் ஒத்துழைப்பால் உங்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உங்கள் திறமை வெளிப்படும்.

**கடகம்**

குடும்பத்தினர் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள். சகோதரர்களால் நன்மை ஏற்படும். முயற்சி பலித்தாமாகும். நிதிநிலை உயரும். வியாபாரத்தில் அதிரடிமாற்றம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**

உங்களுடைய நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். யாரிடமும் வாக்குவாதம் ஏற்படும். பெரியவர்களின் வழிகாட்டுதல் பயனுடையதாக இருக்கும். முயற்சி பலிக்கும்.

**கன்னி**

வீண் செலவுகளால் நெருக்கடி உண்டாகும். மேல் நிதிநிலை சீராகும். செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வரும். குடும்பச் செலவு கட்டுக்குள் அடங்கும்.

**துலாம்**

எதிர்பாராத செலவுகளை இன்று சந்திப்பீர்கள். நிதானமாக செயல்படுவீர்கள். குடும்பத்தில் மாலை வரை மகிழ்ச்சியாக சென்ற செயல் சிறு, சிறு தடங்கலுடன் நடைபெறும்.

**விருட்சிகம்**

நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்களைத் தேடி வரும். முயற்சியில் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னை விலகும். எதிர்பாராத வரவு உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

**தனுசு**

எதிர்காலம் கருதி எடுத்த முயற்சி நிறைவேறும். கோயில் வழிபாட்டை மேற்கொள்வீர். சேமிப்பில் கவனம் செலுத்துவீர். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

**மகரம்**

இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி இன்று மதியத்திற்கு மேல் விலகும். முயற்சி செய்தும் நிறைவேறாமல் இருந்து வந்த செயல் இன்று நிறைவேறும். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும்.

**கும்பம்**

மதியத்திலிருந்து சந்திராஷ்டமம் தொடங்குவதால் எதிலும் கவனம் தேவை. உற்சாகம் குறையாமல் பார்த்து கொள்ளுங்கள். நினைத்ததை அடைய எதிர்பாராத சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**மீனம்**

உங்கள் விருப்பம் நிறைவேறும். நட்புகள் வழியே நன்மை அதிகரிக்கும். கோயில் வழிபாட்டில் மனம் செல்லும். உங்கள் எண்ணத்தில் ஒன்று நிறைவேறும். குடும்பத்துடன் குலதெய்வ கோயிலுக்கு செல்வீர்கள்.

# சிறப்பாக செயல்பட்ட மாநிலம்; தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம்!

*சென்னை, டிசெ. 17*

கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

இந்தியா ருடே சஞ்சிகை ஆளுமை, மருத்துவம், பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட பெரிய மாநிலங்கள் குறித்த ஆய்வு ஒன்றை நடத்தியது. இதில் 2022ஆம் ஆண்டுக்கான "சிறந்த செயல் திறன்" கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது.

இதில், இமாச்சல் பிரதேசம் இரண்டாம் இடத்திலும், கேரளா மூன்றாம் இடத்திலும், குஜராத் 4ஆம் இடத்திலும், பஞ்சாப் 5ஆம் இடத்திலும் உள்ளன. மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, ஹரியானா, தெலுங்கானா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது ருவிற்றர் பக்கத்தில், இந்தியா ருடே இதழ் நடத்திய ஆய்வில் ஆளுமை, மருத்துவம், பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட பெரிய மாநிலங்களில் 2022ஆம் ஆண்டிற்கான "சிறந்தசெயல்திறன்" கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. இது முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் ஆளுமைத் திறனுக்கான அங்கீகாரம் என பதிவிட்டுள்ளார்.

கடந்த 5 வருடங்களாக இந்த பிரிவுகளுக்காக இந்தியா ருடே நடத்திய ஆய்வில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையை சேர்ந்தவர்களால் மீனவர்களின் வலை கொள்ளை!

*இராமேஸ்வரம், டிசெ. 17*

வேதாரண்யம் அருகே மீனவர்கள் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது இலங்கையை சேர்ந்த கொள்ளையர்கள் 4 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பிலான வலைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த புஷ்பவனம் மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்களே வலைகளை பறிகொடுத்துள்ளனர்.

கோடியக்கரைக்கு தென் கிழக்கே 12 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில், நேற்றிரவு 11 மணியளவில் இலங்கையை சேர்ந்த 7 பேர், இரண்டு பைபர் படகுகளில் வந்து, தமிழக மீனவர்களின் படகில் இருந்து ரூ.4 லட்சம் மதிப்புள்ள 900 கிலோ வலைகளை வெட்டி எடுத்துச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று மீனவர்கள் கரையோர காவல் படையிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ)

# தமிழக ஆளுநரை நீக்குமாறு உயர் நீதிமன்றத்தில் வழக்கு!

*சென்னை, டிசெ. 17*

இரட்டை பதவி வகிக்கும் தமிழக ஆளுநரை தகுதி நீக்கம் செய்ய கோரிய வழக்கு விசாரணைக்கு உகந்ததா என்பது குறித்த தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்துள்ளது.

ஆரோவில் அறக்கட்டளை யின் நிர்வாகக் குழு தலைவராக உள்ள தமிழக ஆளுநர் ஆர். என். ரவி, ஆதாயம் தரும் இரட் டைப் பதவி வகிப்பதால், எந்த தகுதியின் அடிப்படையில் ஆளுநர் பதவியில் நீடிக்கிறார் என விளக்கமளிக்க உத்தரவிடக் கோரி தந்தை பெரியார் திரா விடர் கழக வழக்கு தொடர்ந்தது.

அந்த மனுவில், ஆரோவில் அறக்கட்டளை சட்டப்படி, தலைவர் பதவியில் நியமிக்கப் பட்டவருக்கு ஊதியம், படி, ஓய்வூதியம் உள்ளிட்டவை வழங்கப்படும் என்பதால் அவர் ஆதாயம் தரும் இரட்டை பதவி வகிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சாசனம் 158 (2) ஆவது பிரிவின்படி, ஆளு நராக பதவி வகிப்பவர், ஆதாயம் தரும் இரட்டைப் பதவி வகிக்க கூடாது எனத் தெரிவிக் ஷீகப்பட்டுள்ளதால்,



ஆரோவில் அறக்கட்டளை தலைவராக பொறுப்பேற்ற நாளில் இருந்து ஆர்.என்.ரவி, ஆளுநராக பதவியில் நீடிக்க தகுதியிழப்பு ஆகிறார் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கை விசாரணைக்கு எடுப்பதா இல் லையா என்பது தொடர்பில் திகதி குறிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கருணாநிதி நினைவு சின்னத்துக்கு தடை! தமிழக அரசு பதிலளிக்குமாறு உத்தரவு!!

*சென்னை, டிசெ. 17*

சென்னை மெரினா கடற்கரையில் பேனா நினைவுச் சின்னம் அமைக்க தடை கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் சென்னை மாநகராட்சி பதிலளிக்க வேண்டும் என தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, கடந்த 2018 ஒகஸ்ட் 7ஆம் திகதி உடல் நலக் குறைவால் காலமானார். இந்நிலையில், மறைந்த முன்னாள் முதலமைச்சரின் நினைவாக சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரின் நினைவிடத்திற்கு பின்புறம் கடலுக்குள் 42 மீற்றர் உயரத்துக்கு பேனா நினைவிடம் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்நிலையில், பேனா நினைவிடம் அமைக்க தடைக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், சென்னை நேப்பியர் பாலம் முதல் கோவளம் வரையிலான கடலோர பகுதிகள் ஆமைகள் முட்டையிட்டு இனப்பெருக்கும் செய்யும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுமானங்கள் மேற்கொள்வதால் ஆமைகளின் இனப் பெருக்கம் பாதிக்கப்படுவதுடன், கடல் வளமும் பாதிக்கப்படும். கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளின் படி, நிபுணர் குழுவை அமைத்து விதிகளுக்கு மாறாக கட்டுப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்களையும் அகற்ற உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய, மாநில அரசுகள் மற்றும் சென்னை மாநகராட்சி பதிலளிக்க தென் மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# திலினிக்கு பிணை!



கொழும்பு, டிசெ. 17

நிதி மோசடி குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திலினி பிரியமாலிக்கு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று பிணை வழங்கினார்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 9ஆவது வழக்கை விசாரித்த கோட்டை நீதவான் திலின கமகே அவருக்கு பிணை வழங்கினார்.

திகோ குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திலினி பிரியமாலி, பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 8 வழக்குகளில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அந்த வழக்குகளுக்காக அவருக்கு முன்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது. (அ)

# வடக்கில் உயிரிழந்த கால்நடைகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கில் காலநிலை சீரின்மையால் உயிரிழந்த கால்நடைகளுக்கு நட்டஈடு பெற்று கொடுப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் கடந்த வாரம் நிலவிய சீற்ற காலநிலையினால் 500 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்திருந்தன. அந்த உயிரிழந்த கால்நடைகள் உரிமையாளர்களுக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்று கொடுப்பதற்குரிய நடவடிக்கை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

கால்நடை உரிமையாளர்களுக்கு அந்த நட்டஈட்டை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் உயிரிழந்த கால்நடைகளில் பல கால்நடைகள் பதிவில்லாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே உயிரிழந்த கால்நடைகளின் பண்ணையாளர்கள், உயிரிழந்த கால்நடைகளின் பதிவிலக்கம் மற்றும் ஏனைய தரவுகளை உடனடியாக அந்தந்த மாவட்ட கால்நடைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு




வழங்கும் இடத்து அவர்களுக்குரிய நட்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க இலகுவாக இருக்கும்.

வடக்கு ஆளுநரின் அறிவுறுத்தல்-வழிகாட்டலுக்கமைய எங்கள் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அல்லது திறந்தவெளிகளில் உள்ள கால்நடைகளை பாதுகாப்பது தொடர்பாக சில நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 80 வீதமான கால்நடைகள் திறந்தவெளி மூலமாகவே தமது உணவை பெற்றுக் கொள்ளுகின்றன. குறிப்பாக இங்கே உள்ள மாடுகள் குறைந்த உற்பத்திதிறன் கொண்ட மாடுகளாகவே காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 4 இலட்சம் மாடுகளும் கிட்டத்தட்ட 40 ஆயிரம் எருமை மாடுகளும், 3 இலட்சத்துக்கு குறைவான ஆடுகளும் வளர்க்கப்பட்டு வருகிறன. இது ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடும்போது மிக அதிகமான தொகையை காணப்படுகின்றது.

ஆனால் இந்த 4 லட்சம் மாடுகளில் 3 லட்சம் மாடுகள் பால் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதில்லை. இவை பெரும்பாலும் திறந்த வெளிகளிலே மேய்ச்சலுக்கு அனுப்பப்பட்டு தாங்கள் விரும்பிய இடங்களில் நீரை குடித்து வளர்ந்து வருகின்றன. திறந்தவெளி வளர்ப்பு மாடுகளாக அதேபோல கலப்பின பெருக்கத்துக்கு பெரும்பாலும் உட்படாமல் நாட்டின மாடுகளாகவே இவை காணப்படுகின்றமைதான் பால் உற்பத்தித் தன்மை மிகக் குறைவாகவோ அல்லது இல்லை என்று சொல்லும் அளவுக்கு காணப்படுகின்றது.

இருந்தாலும் இந்த கால்நடைகளை வளர்க்கின்ற பண்ணையாளர்களுக்கு இது வருமானத்தை ஈட்டுவதற்கு காரணம், இலங்கையின் இறைச்சித் தேவையில் 30 விதமான பங்கு வடக்கு மாகாணத்தில் இருந்தும், 35 வீதமானது கிழக்கு மாவட்டத்திலிருந்தும் தான் பூர்த்தி செய்யப்படுகின்றது.

ஆகவே வருடாந்தம் மிக அதிகளவான கால்நடைகளை இறைச்சிக்காக அனுப்பி எங்கள் பண்ணையாளர்கள் மிக அதிகளவான வருமானத்தை பெற்றுக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது-என்றார். (அ)

# தரமற்ற 'லஞ் சீற்' தயாரித்த தொழிற்சாலை சுற்றிவளைப்பு

கொழும்பு, டிசெ. 17

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் புலனாய்வுப் பிரிவினர் கெஸ்பேவ பிரதேசத்தில் உள்ள பொலித்தீன் தொழிற்சாலை யொன்றை சுற்றிவளைத்து இரண்டு தொன்களுக்கும் அதிகமான தரமற்ற லஞ்சீற்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆண்டுஅதிகார சபை நடத்திய மிகப்பெரிய பாலித்தீன் சோதனை இது வாகும்.

அதிகார சபைக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கெஸ்பேவ, பதுஅந்தர பிரதேசத்தில் பொலித்தீன் தொழிற்சாலை யொன்று சோதனையிடப்பட்டு, 20 மைக்ரோனுக்குக் குறைவான 2157 கிலோவுக்கும் அதிகமான லஞ்ச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த லஞ்ச் சீட்டுகளின் பெறுமதி சுமார் ஏழு இலட்சம் ரூபா என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பன நடவடிக்கை எடுத்துள்ளன. (அ)

# ஐந்து வருடங்கள் சம்பளமற்ற விடுமுறையில் 57 மருத்துவர்கள் வெளிநாடு செல்ல முயற்சி

கொழும்பு, டிசெ. 17

57 வைத்திய நிபுணர்கள் ஐந்தாண்டு கால சம்பளமில்லாத விடுமுறையில் வேலைக்காக இங்கிலாந்து செல்ல சுகாதார அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளனர்.

சுற்றறிக்கை 2022/14 தொடர்பாக, அவர்கள் வெளிநாடு செல்ல



அனுமதி கோரியுள்ளனர்.

இவ்வாறு மருத்துவர்கள் அவ்வப்போது வெளிநாடுகளுக்கு செல்வதாக சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் லால் பனாபிட்டிய தெரிவித்தார். (அ)

# 670,000 ஹெக்ரேயரில் நெற்செய்கை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 17

இந்த பருவத்தில் 670,000 ஹெக்ரேயர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஏற்படக்கூடிய உலக உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்க இப்போதிருந்தே தயாராக வேண்டும் என பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தார்.

அதற்காக நாட்டில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலத்திலும் விவசாயம் செய்து கால்நடை வளத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.(அ)

# காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிய தாய் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 17

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிவந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று மரணமடைந்தார்.

வவுனியா கல்மடு பூம்பு காரை சேர்ந்த இ.வள்ளியம்மா (வயது -78) என்பவரே நேற்று முன்தினம் வியாழக் கிழமை மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் இராமச்சந்திரன் செந்தூரன் என்பவர் வவுனியா நகருக்கு வழமை போன்று தொழிலுக்கு (தினக் கூலி வேலைக்கு) சென்ற வேளை 2007.05.17 அன்று கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்

மகனைத் தேடி வவுனியாவில் 2100 நாட்கள் கடந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிக்கண்டறியும் தமிழர் தாயக சங்கத்தின் உறுப்பினராக தீவிர பங்களிப்பு வழங்கிய நிலையில் மகனைக் கண்டுபிடித்து தரப் போராடியிருந்தார்.

அரச படைகள் மற்றும் அதன் துணை ஆயுதக் குழுக்களின் கூட்டு முயற்சியால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 15 வருடங்களாக தேடியலைந்து, உண்மையைக் கண்டறிந்து நீதி மற்றும் பொறுப்புக் கூறலை வேண்டி நின்ற தாயார் ஒருவர் நோய் காரணமாக மகனை காணாமலேயே அவர் நேற்று முன் தினம் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# முட்டை விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 17

நுகர்வோர் அதிகார சபையினால் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த தீர்மானித்ததை யடுத்து சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாகவும் சிவப்பு நிற முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் நுகர்வோர்



அதிகாரசபை நிர்ணயித்திருந்தது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பெப்ரவரி 06 ஆம் திகதி வரை இடைநிறுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்ததையடுத்து அதுவரை 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயிக்கும் திறனை நுகர்வோர் விவகார அதிகாரசபை தற்காலிகமாக இழந்ததையடுத்து, உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான விலையை நிர்ணயித்துள்ளனர். அ)

# போதைப்பொருளுக்கு அடிமையாகிய 81 மாணவர் நவம்பரில் புனர்வாழ்வுக்கு

கொழும்பு, டிசெ. 17

ஐஸ் போதைக்கு அடிமையான 81 பாடசாலை மாணவர்கள் கடந்த மாதம் புனர்வாழ்விற்காக அனுப்பப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனையை அகற்ற பொலிஸாருடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# கடலட்டை பண்ணைகளை உடனடியாக அகற்றுங்கள்!

## யாழ்ப்பாணத்தில் மக்கள் போராட்டம்




யாழ்ப்பாணம், டிசெ. 17
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராஞ்சி இழவன்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற அட்டைப்பண்ணைகளை அகற்றுமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை வட மாகாண ஆளுநர் செயலகம் முன் போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டம் யாழ். பஸ் நிலையத்தில் முற்பகல் 10:30 மணியளவில் ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி வழியாக சென்று வட மாகாண ஆளுநர் செயலகத்தை அடைந்தது.

போராட்டக்காரர்கள் வட மாகாண ஆளுநர் செயலகத்தை அடைந்ததும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் தெரிவு செய்யப்பட்ட பிரதிகளை ஆளுநரின் செயலாளரை சந்திப்பதற்காக உள்ளே வருமாறு அழைத்தார்.

ஆளுநரின் செயலாளரைச் சந்தித்த பின்னர் மன்னார் மாவட்ட கடற் தொழில் சங்கத்தின் தலைவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

கிராஞ்சியில் முறையற்ற சட்ட விரோத கடல் அட்டை பண்ணைகளை அகற்றுமாறு கோரி மீனவ சமூகத்தினர் சுமார் 70 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கிராஞ்சியில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற அட்டைப் பண்ணைகளால் சிறு மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுடைய தொழில் செய்யும் இடங்களில் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் வட மாகாண ஆளுநரின் செயலாளரைச் சந்தித்து அவரிடம் மஜகரை வழங்கிய நிலையில் எமது பிரச்னைகள் தொடர்பில் தெளிவாக கூறியுள்ளோம்.

ஆளுநர் கொழும்பில் உள்ளதால் எமது கோரிக்கை தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்தி இரண்டு கிழமைகளில் அதற்கான பதிலை பெற்று தருவதாகவும் செயலாளர் பதிலளித்தார்-என்றார். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 17
இந்த ஆண்டில் இதுவரை 6 இலட்சத்து 44 ஆயிரத்து 186 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 7 நாட்களில் மாத்திரம் 16 ஆயிரத்து 168 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதுவரையிலும் 20 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில் அதிகமானோர் இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களாவர்.

பிரிட்டனிலிருந்து 78 ஆயிரத்து 827 பேரும், ரஷ்யவைச் சேர்ந்த 74 ஆயிரத்து 713 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் சுற்றுலாத் துறை அமைச்சு கூறியுள்ளது. (அ)

# ஜே. வி. பி. பொதுச்செயலர் பதவி விஜித ஹேரத்துக்கு?



கொழும்பு, டிசெ. 17
ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அந்த பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அவர் ஓய்வு பெற்ற பின்னர், புதிய பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் யாழில்

யாழ்ப்பாணம், டிசெ. 17
கிராம மட்ட அமைப்பினருக்கு, இளையோரை போதைப் பொருள் பாவனைக்கு அகப்படாமல் பாதுகாக்கும் யுத்திகள் தொடர்பிலும் பால்நிலை வன்முறையற்ற சமத்துவமான சந்தோசமான குடும்ப வாழ்வை நோக்கி நகர்த்தும் முகமான முழு நாள் பயிற்சி ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஹெல்தி லங்கா நிறுவனம் மற்றும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய இந்த பயிற்சி நெறியில், ஹெல்தி லங்கா நிறுவனத்தின் வட மாகாண வேலைத்திட்ட இணைப்பாளர் தேவராசா பிறேமராஜா அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு பயிற்சி வகுப்பை நெறிப்படுத்தினார்.

இந் நிகழ்வில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் றோய், சமூக மட்ட அமைப்பினர், இளைஞர் மற்றும் யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# பெருந்தொகை ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள்கள் கைப்பற்றல்

கொழும்பு, டிசெ. 17
200 கிலோவுக்கும் அதிக எடையை கொண்ட ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்களை கடற்படையினர் கைப்பற்றினர்.

தெற்கு கடற்பரப்பில் வைத்து, இரண்டு படகுகளிலிருந்து இந்த போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களையும், சந்தேக நபர்களையும் பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# சூரியசக்தி மின்குமிழ்களை கம்பத்துடன் அறுத்து எடுத்துச் சென்றனர் திருடர்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 17
பருத்தித்துறை-வல்லை வீதியில் அமைக்கப்பட்டிருந்த சூரியசக்தி மூலம் இயங்கும் வீதி மின் விளக்குகள் கொள்ளையர்களால் கம்பத்தோடு அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.



தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 5 ற்கும் மேற்பட்ட வீதி மின்விளக்குகள் அவை பொருத்தப்பட்டிருந்த இரும்பு கம்பத்துடன் சேர்த்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மேற்படி வீதி விளக்குகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொள்ளையடிக்கப்பட்ட வீதி விளக்குகளை சாதாரணமாக எடுத்துச் செல்ல முடியாது.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தை ஒரு குழுவாகவே செயற்படுத்தியிருக்க முடியும் என கூறும் பொறுப்பு வாய்ந்தோர், அப்பகுதியில் இராணுவ முகாமும் அமைந்துள்ள நிலையில் அவர்களும் இது குறித்து கண்காணிக்கவில்லை எனவும் குற்றம்சாட்டியுள்ளனர். (அ)

# வெற்றிலைக்கேணியில் கணவனால் மனைவி, பிள்ளை மீது வாள்வெட்டு!

வடமராட்சி, டிசெ.16
வடமராட்சிக்கிழக்கு வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம அலுவலர் பிரிவில் குடும்பத் தகராறு காரணமாக கணவனால் வாளால் வெட்டப்பட்டு மனைவி மற்றும் மகள் இருவரும் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சி,இராசரஞ்சினி, மகள் சி.பவித்திரா ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

நாகர்கோயில் வடக்கு பகுதியில் வசித்து வந்த நிலையில் தொடர்ச்சியாக குறித்த குடும்பத்தில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. மனைவி முன்னர் தலையில் தாக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

இதனை அடுத்து சில மாதங்கள் தாய் மற்றும் மகள் ஆகியோர் வெற்றிலைக்கேணியில் உள்ள தமது உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தனர். இவ்வேளையில் நேற்று முன்தினம் குறித்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் மதுபோதையிலேயே இவ்வாறு தாக்குதல் நடத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது.

வாளால் வெட்டப்பட்ட அவர்கள் அவலக்குரல் எழுப்பியதை அடுத்து அங்கு திரண்ட மக்கள் அவசர நோயாளர் காவு வண்டிக்கு தகவல் அனுப்பி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

அத்துடன் தகராறில் ஈடுபட்ட நபரை கலைத்துப்பிடித்து கட்டிப்போட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-02)



ஈழநாடு



# ரணிலுடன் சேராவிட்டால் சஜித்தின் அரசியல் எதிர்காலம் அவ்வளவுதான்

## ஆலோசனை சொல்கிறார் ஹறின் பெர்னாண்டோ

*கொழும்பு, டிசெ. 17*

முதுகெலும்பில்லாத சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்று சேர்ந்து அரசியல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவரது அரசியல் எதிர்காலம் அவ்வளவுதான் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய நாட்டை விட்டு ஓடிய பின் அவரின் இடத்துக்கு ரணில் வராமல் சஜித் பிரேமதாஸ வந்திருந்தால் அவரால் செய்ய முடியாமல் போயிருக்கும். சஜித் ஜனாதிபதியாவதை நான் இப்போதும் விரும்புகின்றேன்.

ஆனால், அதற்கான அனுபவம்-பக்குவம் அவருக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அவர் ஆட்சியைப் பாரமேற்றிருக்க வேண்டும். சவாலை ஏற்று ஜெயித்துக் காட்டியிருக்க வேண்டும்.




அதுதான் ஒரு தலைவனுக்கு அழகு. சவாலைக் கண்டு ஓடக்கூடாது.

நீங்கள் எடுத்து செய்யுங்கள் என்று மொட்டுக் கட்சி பின்வாங்கியது. அதை நாம் பயன்படுத்திருக்க வேண்டும். அருமையான சந்தர்ப்பம். அதைச் சஜித் செய்யவில்லை.

நாட்டுக்குச் சேவை செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு இன்னும் சந்தர்ப்பம் உண்டு. சஜித், ரணிலின் கீழ் இன்னும் பல விடயங்களைக் கற்றிருக்கலாம்.

அன்று ரணில் செய்த தப்பு அவரது நண்பர்கள் நான்கைந்து பேரோடு மாத்திரம் இணைந்து அரசியல் செய்தது தான். அதை நாங்கள் எதிர்த்தோம்.

சஜித்தை அரசியலில் இருந்து அழிப்பதற்கு ரணில் முயற்சி செய்வது போல் தெரிந்ததும் நாம் சஜித்துக்கு ஆதரவாக நின்றோம்.

சஜித் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்தபோது அவருக்கு நாங்கள் ஆதரவு வழங்கினோம். ஆனால், அவர் சென்றதோ வேறொரு பாதையில்.

இப்போது சஜித்தின் கூட்டங்களுக்கு மக்கள் அதிகமாக வருவது அதிசயமான ஒன்று அல்ல.

2023இல் புதிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படும். அது சஜித் ஊடாக அல்ல. புதிய அரசியல் மாற்றம் ஒன்று எங்கோ இருந்து வரும். பாரம்பரிய முறை மாறும்-என்றார். (அ)

# நெற்பயிர்களில் அதிகரிக்கும் இலைமடிச்சுக்கட்டி தாக்கம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 17*

வடக்கு நெற்பயிர்களில் தற்பொழுது மிகவும் தீ விரமாக இலைமடிச்சுக்கட்டியின் தாக்கம் அவதானிக்கப்படுவதாக வடக்கு மாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய காலநிலையானது இதன் பெருக்கத்திற்கு சாதகமாக காணப்படுகிறது.

விவசாயிகள் சரியான கட்டுப்பாடுகளை உரிய நேரத்தில் விவசாய போதனாசிரியரின் ஆலோசனையுடன் சிபார்சு செய்யப்பட்ட இரசாயன நாசினிகளை பயன்படுத்தி கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

குறித்த நோயை அடையாளம் காணுதல் எவ்வாறு எனின் இதன் குடம்பியானது நீளப்பாடாக இலைகளை மடித்து இலைகளின் உள்ளே இருந்து இழையங்களை அராவி உண்ணும். இதனால் இலைகள் வெள்ளை நிறமாகி மடிந்து உலர்ந்து காணப்படும்.

இதன் காரணமாக இலைகளின் பச்சையம் அகற்றப்பட்டு ஒளித்தொகுப்பு நடைபெறும். பரப்பளவு குறைவடையும் இதனால் விளைச்சல் பாதிப்படையும்.

கட்டுப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்ட அளவில் விதை நெல் பயன்படுத்தல் (2-2.5 புசல் ஏக்கர்), பரிந்துரைக்கப்பட்ட அளவில் நைதரசன் பசளை பாவனை, இரைகொளவிகள் (பறவைகள்) அமர்ந்து இக்குடம்பிகளை உண்பதற்கு வசதியாக ஆங்காங்கே தென்னை மட்டை, கங்குமட்டை போன்றவற்றை நிலைநிறுத்தி வைத்தல்.

இரசாயன கட்டுப்பாடுகளாக குளோரன்ரனிலிபுறோல் 20வீதம் தயோமெதொக்சாம் 20வீதம் 40கிராம் 1 ஏக்கர் (ஐதாக்கல் 4கிராம் 16 லீ. தாங்கி) நெபியுபெதனோசயிட் 200கிராம் 320 மி.லீ வீதமும் பாவிக்கவேண்டும் -என்றார். (அ)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலர் உணவுப் பொதிகள் விநியோகம்

*யாழ்ப்பாணம், டிசெ. 17*

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழுகின்ற பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் சீரற்ற கால நிலையால் அதிகம் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. நாவாந்துறை மற்றும் பழம் வீதி ஆகிய பகுதிகளில் இருந்து



இக்குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் வழங்கிவைக்கப் பட்டுள்ளன.

இதற்கான நிதியை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகள் வழங்கியிருந்தனர். இந்நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கினார். (அ)

# ஐ. தே. கவுடன் பெரமுன கூட்டணி அமைப்பதில் பிரச்னையில்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

*கொழும்பு, டிசெ. 17*

புதிய கூட்டணியின் ஊடாக எதிர்காலத்தில் எந்த தேர்தலாக இருந்தாலும் அவற்றில் போட்டியிட போவதாகவும் போட்டியிடும் சின்னம் தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற வைபவத்தின் பின்னர், ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டணி அமைக்கப்படுமா என அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அவர் தற்போது ஆட்சியில் இருப்பது ரணில் ராஜபக்ஷ அரசாங்கம்.

இரண்டு தரப்பும் மிகவும் அனுபவமிக்க அணிகள். இதனால், கூட்டணி அமைப்பதில் பிரச்னையில்லை.

மேலும் சில அரசியல் கட்சிகளை இந்த கூட்டணியில் இணைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

எதிர்காலத்தில் நடக்கும் எந்த தேர்தலாக இருந்தாலும் எதிர்கொள்ள தயார். எதிர்காலத்தில் எந்த தேர்தலாக இருந்தாலும் அதில் வெற்றி பெற முடியும்-என்றார்.

கூட்டணி ஒன்றை அமைக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமை தொடர்பிலும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், எவரும் கூட்டணி அமைத்து அனைவரும் ஓரிடத்திற்கு வந்தால் நல்லது. மே மாதம் 9 ஆம் திகதி எரியூட்டப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 9 ஆம் திகதி இந்த சம்பவங்களை செய்தது மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி ஆகியன.

இவர்களால் நாட்டில் ஜனநாயக ரீதியாக ஆட்சிக்கு வர முடியாது. எம்மை தாக்கி, கொலை செய்து, விரட்டியடித்து விட்டு ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் தேவை இவர்களுக்கு இருக்கின்றது.

நாட்டு மக்கள் தற்போது இதனை புரிந்துக் கொண்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தினமும் வந்து உண்மையான நிலைமைகளை கூறி வருகின்றனர். இறுதியில் தூள்காரர்கள், கஞ்சாக்காரர்கள், விபசாரிகள் போராட்டத்தை கையில் எடுத்தனர். நான் பாராளுமன்றத்தில் கூறியதை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தற்போது வெளியில் வந்து கூறுகின்றனர்.

மீண்டும் போராட்டத்திற்கு செல்ல வேண்டாம் எனக் கூறுகின்றனர். அமைதியான போராட்டகாரர்கள் அல்ல. அமைதியான போராட்டத்தை கைப்பற்றி நாட்டை அழித்தவர்கள் பற்றியே கூறுகின்றனர்.

மே 9 ஆம் திகதி சுமார் 800 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீட்டை எதிர்பார்க்கின்றனர். சிலர் இழப்பீட்டை பெறமாட்டார்கள். வீடுகளை தீயிட தூண்டிவிட்டவர்கள் தற்போது புனிதர்கள் போல் பேசுகின்றனர். இந்த சம்பவங்களுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கும் தொடர்புள்ளது-என்றார். (அ)

# துன்னாலை தெற்கில் வீடு இராணுவத்தால் கையளிப்பு



*வடமராட்சி, டிசெ.17*

இராணுவத்தால் துன்னாலைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளி தலைமையிலான குடும்பமான திரு திருமதி செல்வரட்ணத்துக்கு வீடு ஒன்று கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

551 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சிந்தக்க விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக 55 ஆவது படைபிரிவு மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன, சிறப்பு விருந்தினர்களாக உப பொலீஸ் அத்தியட்சகர் சந்திம இத்துமால் கொட, பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க, கரவெட்டி பிரதேச செயலர் தயாரூபன், கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் பொன்னையா மற்றும் இராணுவ அதிகாரிகள் கிராம சேவகர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கனடா வாழும் மீட்பரின் தேவாலயம், மோதரை அரிமா கழகம், வன்னி எயிட் நிறுவனம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ரவி ரட்ணசிங்கம் ஒழுங்கமைப்பில் இந்த வீடு 551 ஆவது படைப் பிரிவு பிரிகேடியர் சிந்தக்க விக்கிரமசிங்கவின் வழிநடத்தலிலும் கட்டுமான உதவியிலும் இந்த வீடு கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்பட்து. (அ-02)



வ.மு.முரளி

"ரூபாய் நோட்டில் லட்சுமி படம் அச்சிட வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அவர் பாஜகவுக்கு கடும் சவாலைக் கொடுத்தார். தீவிர ஹிந்துத்துவக் கட்சியான பாஜகவே இதனைச் சமாளிக்க இயலாமல் தடுமாறியது. பிரதமர் மோடியை எதிர்க்கும் பிற அரசியல் கட்சித் தலைவர்களுடன் இணையாமல், தனித்து பாஜகவை எதிர்த்துப் போராடினார் கேஜரிவால்.

# இந்தியத் தலைநகர் டில்லியில் நிகழ்ந்த அதிரடி மாற்றம்!

இந்தியாவில் குஜராத், ஹிமாசல் ஆகிய இரு மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளின் பரபரப்பில், டில்லி மாநகராட்சித் தேர்தலில் நிகழ்ந்திருக்கும் அதிரடி மாற்றம் பலராலும் கவனிக்கப்படவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக டில்லி மாநகராட்சியை நிர்வகித்து வந்த பாஜகவிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கிறது ஆம் ஆத்மி கட்சி.

தலைநகர் டில்லியை உள்ளடக்கிய சட்டப்பேரவையில் 2015 முதல் அசுர வலிமையுடன் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியில் இருந்தாலும் டில்லி மாநகராட்சியை வசமாக்க முடியவில்லை. அதில் பாஜக தொடர்ந்து வென்று வந்தது.

டில்லி மாநகராட்சி இதற்கு முன் வடக்கு டில்லி, தெற்கு டில்லி, கிழக்கு டில்லி என மூன்று மாநகராட்சிகளாக நிர்வகிக்கப்பட்டது. மூன்றையும் பெரும்பான்மை வலுவுடன் பாஜக நிர்வகித்து வந்தது.

அரவிந்த் கேஜரிவால் தலைமையிலான மாநில அரசுக்கும், பாஜக நிர்வகித்த மூன்று மாநகராட்சிகளுக்கும் இடையே அதிகாரப் போட்டியும் பரஸ்பர குற்றச்சாட்டுகளும் தொடர்ந்து வந்தன. இதனிடையே மத்திய அரசின் புதிய சட்டத்தால் மூன்று மாநகராட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே டில்லி மாநகராட்சியாக கடந்த மே மாதம் அமைக்கப்பட்டது.

இதற்கு முன் 2017-இல் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தல்களில் மொத்தமிருந்த 272 வார்டுகளில் பாஜக 181 வார்டுகளில் வென்றிருந்தது (36.1 வீத வாக்குகள்). ஆம் ஆத்மி கட்சி 48 வார்டுகளிலும் (26.2 வீத வாக்குகள்), காங்கிரஸ் 30 வார்டுகளிலும் (21.1 வீத வாக்குகள்) வென்றிருந்தன.

வார்டுகள் மறுசீரமைப்புக்குப் பிறகு ஒருங்கிணைந்த டில்லி மாநகராட்சியின் 250 வார்டுகளுக்கு தேர்தல் கடந்த டிச. 4- இல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் டிச. 7-இல் வெளியாகின. இத்தேர்தலில் பாஜகவை பின்னுக்குத் தள்ளி ஆம் ஆத்மி அறுதிப் பெரும்பான்மை யைவிட கூடுதலாக 8 வார்டுகளில் வென்றுள்ளது.

மொத்தமுள்ள 250 வார்டுகளில் ஆம் ஆத்மி கட்சி 134 இடங்களில் (42 வீத வாக்குகள்) வென்று மாநகர நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளது. அடுத்தபடியாக பாஜக 104 இடங்களிலும் (39.1 வீத வாக்குகள்), காங்கிரஸ் 9 இடங்களிலும் (11.7 வீத வாக்குகள்) வென்றுள்ளன.

ஊடகங்கள் கணித்ததுபோல ஆம் ஆத்மி கட்சிக்கு மாபெரும் வெற்றி கிடைக்கவில்லை. இத்தேர்தலில் 20 இடங்களைக்கூட பாஜக வெல்லாது என்று டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் பிரசாரத்தில் கூறிவந்தார். 15 ஆண்டு கால தொடர்ச்சியான நிர்வாகத்தால் பாஜகவினர் மீது மக்களுக்கு அதிருப்தி இருந்தது. ஆனால், அதையும் மீறி 104 இடங்களை பாஜக வென்றிருப்பது பலரையும் வியக்க வைத்திருக்கிறது.

73.36 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்த இத்தேர்தலில் பாஜகவைவிட 2.2 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்று மாநகராட்சியை ஆம் ஆத்மி கட்சி வசப்படுத்தி இருக்கிறது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கியமான விஷயம், தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களில் சரிபாதி பெண்கள் என்பதாகும். இவர்களில் 71 பேர் ஆம்ஆத்மி கட்சியினர்.



குஜராத் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக மாபெரும் வெற்றி பெற பிரதமர் மோடி காரணமானது போலவே, டில்லி மாநகராட்சித் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் வெற்றிக்கு மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவால் காரணமாகி உள்ளார். மாநில அரசில் ஊழலற்ற நிர்வாகம், கேஜரிவாலின் இலவச அறிவிப்புகள், முந்தைய மாநகராட்சி நிர்வாகம் மீதான அதிருப்தி ஆகியவை இந்த வெற்றிக்குக் காரணம் என்றாலும், இவை அனைத்தையும்விட முக்கியமான காரணம் பாஜகவின் பிரதான எதிரியாக தன்னை ஆம் ஆத்மி கட்சி முன்னிறுத்திக் கொண்டதுதான்.

மத்திய அரசுடன் மோதல் போக்கைத் தொடர்ந்த முதல்வர் அரவிந்த் கேஜரிவால், பாஜகவுக்குப் போட்டியாக மிதவாத ஹிந்துத்துவப் போக்கையும் ஒருசேரக் கடைப்பிடித்தார்.

ரூபாய் நோட்டில் லட்சுமி படம் அச்சிட வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அவர் பாஜகவுக்கு கடும் சவாலைக் கொடுத்தார். தீவிர ஹிந்துத்துவக் கட்சியான பாஜகவே இதனைச் சமாளிக்க இயலாமல் தடுமாறியது. பிரதமர் மோடியை எதிர்க்கும் பிற அரசியல் கட்சித் தலைவர்களுடன் இணையாமல், தனித்து பாஜகவை எதிர்த்துப் போராடினார் கேஜரிவால். இதன்மூலம், பாஜகவை எதிர்க்கக் கூடிய திறனுள்ள ஒரே கட்சி என்ற பிம்பத்தை அவர் உருவாக்கினார்.

இதுவரையிலும் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து வந்த சிறுபான்மையினர் ஆம் ஆத்மி கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்தனர். இதுவே காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சியாகவும் ஆம் ஆத்மி கட்சியின் எழுச்சியாகவும் மாற்றம் பெற்றுள்ளது. டில்லி மாநகராட்சியில் சுமார் 60 வார்டுகளில் வெற்றியைத் தீர்மானிப்பவையாக சிறுபான்மையினரின் வாக்குகள் உள்ளன. பாஜக எதிர்ப்பு என்ற தனது நிலைப்பாட்டால் அந்த இடங்களில் ஆம் ஆத்மி கட்சி எளிதாக வெல்ல முடிந்திருக்கிறது.

தவிர, ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த மாநகர நிர்வாகம் தொடர்பான பத்து அம்சங்கள், வாக்காளர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தின. தூய்மையான அழகிய டில்லியை உருவாக்குவோம் வெளிப்படையான ஊழலற்ற நிர்வாகத்தை அளிப்போம் மாநகராட்சிப் பள்ளிகள், மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவோம் மோசமான சாலைகளைச் சீரமைப்போம் மாநகராட்சி ஊழியர்களுக்கு குறித்த தேதியில் ஊதியம் வழங்குவோம் வாகன நிறுத்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்போம் - ஆகியவை அரவிந்த் கேஜரிவால் அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் முதன்மையானவை.



எதிர்த்தரப்பிலோ இதுவரை 15 ஆண்டுகள் மாநகராட்சியை நிர்வகித்ததால் ஏற்பட்ட ஊழல் புகார்கள், அதிருப்திச் சுமைகளுடன் பாஜக தடுமாறியது. **(09 ஆம் பக்கம் பார்க்க...)**

# டொலர் படுத்தும் பாடு!



கடுமையான பண வீக்கத்தாலும், விலைவாசி உயர்வாலும் உலகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. உலகப் பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கிறது என்பதைவிட தடுமாறிக் கொண்டிருக்கிறது என்பதுதான் நிஜ நிலைமை. அசாதாரணமான பொருளாதாரப் புயல் உருவாகி அதனால் பெரும்பாலான நாடுகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன.

கோவிட்-19 கொள்ளை நோய்த் தொற்றும், உக்ரைன்-ரஷ்ய போரும் மட்டுமே இதற்கு காரணமல்ல. அதற்கு முன்பே பிரச்னை தொடங்கிவிட்டது. சீனா, ஏனைய நாடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியதைத் தொடர்ந்து, அதற்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும், சீனப் பொருள்கள் மீதான அதிகரித்த இறக்குமதி வரிகளும் எதிர்வினையை ஏற்படுத்தும் என்று மேலைநாடுகள் எதிர்பார்க்கவில்லை. சீன இறக்குமதிகளின் மீதான தடை, விநியோகச் சங்கிலி தடைபடக் காரணமானது.

அதைத் தொடர்ந்து, கொள்ளை நோய்த்தொற்றுப் பரவல் பல நாடுகளின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது. இவை இரண்டும் போதாதென்று உக்ரைன்-ரஷ்ய போரும் தொடங்கியதால் விநியோகச் சங்கிலி முற்றிலுமாகச் சிதைந்து ஏற்றுமதியும் இறக்குமதியும் கணிசமாகக் குறைந்து பொருளாதார வீழ்ச்சியை உலகம் சந்திக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சீனா மீதான தடை, கொள்ளை நோய்த்தொற்று, உக்ரைன்-ரஷ்ய போர் ஆகியவற்றின் விளைவால் கடுமையான பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த எல்லா நாடுகளின் மத்திய வங்கியும் வட்டி விகிதத்தை அதிகரித்தாக வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டன. அதன் விளைவாக விலைவாசி உயர்வு கட்டுக்கடங்காத நிலையை எட்டியிருக்கிறது.

மேலே குறிப்பிட்ட காரணிகளால் உலகளாவிய நிலையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரத் தேக்கம் ஒருபுறம் பணவீக்கம் போதாதென்று, ஏற்றுமதிகள் குறைந்து உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருப்பது இன்னொரு புறம். இவை அனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

டொலரின் மதிப்பு அதிகரிக்கும் பின்னணியையும் நாம் கவனிக்க வேண்டும். ஏனைய செலாவணிகளுக்கு எதிரான டொலரின் மதிப்பு கடந்த அக்டோபர் மாதம் 15 வீதம் முதல் 20 வீதம் வரை அதிகரித்திருந்தது.

தற்போது அது சற்று குறைந்திருந்தாலும்கூட, டொலர் மதிப்பு அதிகரித்திருப்பதுதான் பெரும்பாலான நாடுகளில் விலைவாசி உயர்வுக்கு காரணமாகி இருக்கிறது.

> டொலரின் மதிப்பு அதிகரிக்க அதிகரிக்க, காரணமில்லாமல் ஏனைய நாடுகளிலிருந்து முதலீடுகள் அமெரிக்காவை நோக்கி திரும்பும். அதன்மூலம், தங்களது முதலீடுகள் பாதுகாப்பாக இருக்கும் என்று முதலீட்டாளர்கள் கருதுவார்கள்.



சர்வதேச வணிகம் பெரும்பாலும் டொலரில்தான் நடைபெறுகிறது. உணவுப் பொருள்கள், எரிபொருள் தேவைகளுக்கு இறக்குமதியை நம்பியிருக்கும் வளர்ச்சியடையும் நாடுகள், அதிகரித்த டொலர் மதிப்பால் மிகவும் பாதிக்கப்படுகின்றன.

உலகம் எங்கும் விலைவாசி உயர்வுக்கு அதுதான் முக்கியமான காரணம். உக்ரைன் போருக்கு முந்தைய நிலைக்கு கச்சா எண்ணெய் விலை இறங்கினாலும்கூட, டொலர் மதிப்பு காரணமாக 12 வீதம் முதல் 14 வீதம் வரை அதிகமாகவே இருக்கும்.

டொலரின் மதிப்பு அதிகரிக்க அதிகரிக்க, காரணமில்லாமல் ஏனைய நாடுகளிலிருந்து முதலீடுகள் அமெரிக்காவை நோக்கி திரும்பும். அதன்மூலம், தங்களது முதலீடுகள் பாதுகாப்பாக இருக்கும் என்று முதலீட்டாளர்கள் கருதுவார்கள். இந்தமுறை டொலரின் மதிப்பு மிக அதிகமாகியிருப்பதால் அமெரிக்காவை நோக்கி மீண்டும் திரும்பும் முதலீட்டின் அளவு மிக மிக அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் பெரும்பாலான நாடுகளின் கடன் தவணைகள் தவறுகின்றன. டொலர் மதிப்பு அதிகரிப்பால், ஏற்றுமதியால் ஏற்படும் ஆதாயத்தைவிட உற்பத்திக்கு தேவையான கச்சாப் பொருள்கள் இறக்குமதியின் மதிப்பு கூடுவதால் ஏற்படும் பாதிப்பு அதிகம். உற்பத்தி குறையும்போது ஏற்றுமதியும் குறைந்துவிடுகிறது.

இதுபோன்ற சூழல் ஏற்படுவது புதிதல்ல. 1985-இல் உலகளாவிய அளவில் பணவீக்கம் அதிகரித்தது. அதன் விளைவாக அமெரிக்காவின் இறக்குமதிகள் அதிகரித்து முக்கியமான எஃகு, மோட்டார் வாகன துறைகள் பாதிப்பை சந்திக்க நேர்ந்தது.

வெளிநாட்டு மோட்டார் வாகனங்களின் வரவால் அமெரிக்காவின் முக்கிய ஆட்டோ நிறுவனங்கள் தடுமாறின. டொலரின் மதிப்பைக் குறைப்பதன் மூலம்தான் தனது பொருளாதாரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதால் அமெரிக்கா உலகின் ஏனைய நாடுகளுடன் ஓர் ஒப்பந்தத்துக்கு முன்வந்தது. அதை பிளாஸா ஒப்பந்தம் என்று அழைப்பார்கள்.

அமெரிக்காவின் இன்றைய நிலைமை அதுவல்ல. டொலரின் மதிப்பு கூடுவதன் மூலம் தனது உள்நாட்டு விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க நினைக்கிறது அமெரிக்கா. வளர்ச்சி அடையும் நாடுகளின் ஏற்றுமதிகள், குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் விலைவாசியை கட்டுக்குள் வைக்கலாம் என்பது அமெரிக்காவின் திட்டம்.

அமெரிக்காவின் அணுகுமுறை தவறானது. பிற நாடுகளின் செலாவணிகள் 1 வீதம் குறைவதால் அமெரிக்காவில் விலைகள் 0.03 வீதம் தான் அதிகரிக்கிறது. ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளில் 3 மடங்கும், வளர்ச்சியடையும் நாடுகளில் 6 மடங்கும் அதிகரிக்கிறது. அதனால் டொலரின் மதிப்பு குறைவதால் அமெரிக்காவில் விலைவாசி பெரிய அளவில் பாதிக்காது. ஆனால், உலகின் பிற நாடுகளில் பணவீக்கம் கட்டுக்குள் வரும்.

டொலரின் மதிப்பு சற்று குறைவதன் மூலம்தான் உலகப் பொருளாதாரத்தை மந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க முடியும். உலகமயச் சூழலில் எல்லா நாடுகளும் ஏதாவது ஒருவிதத்தில் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. உலகின் ஏனைய நாட்டு பொருளாதாரங்கள் சீர்குலைந்தால், தனது பொருளாதாரமும் பாதிக்கப்படும் என்பதை அமெரிக்கா உணர வேண்டும்.

# இந்தியத் தலைநகர் டில்லியில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காங்கிரஸ் கட்சி, தேர்தலுக்கு முன்னதாகவே மூன்றாமிடத்துக்கு நகர்ந்துவிட்டது. இத்தகைய நிலையில் டில்லி மாநகராட்சித் தேர்தலை மிகவும் லாகவமாக தனக்குச் சாதகமானதாக கேஜரிவால் மாற்றிவிட்டார். அதன் விளைவே இந்தச் சிறப்பான வெற்றி.

தலைநகர் டில்லியில் பாஜகவுக்கு வலுவான அடித்தளம் உண்டு. காங்கிரஸ் மத்தியில் கோலோச்சிய காலத்திலேயே டில்லியில் பாஜக வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றதுண்டு. லால் கிருஷ்ண அத்வானியை பெரும் தலைவராக்கியது டில்லி மாநகரம்தான்.

கே.ஆர்.மல்கானி, மதன்லால் குரானா, சாஹிப் சிங் வர்மா, விஜய்குமார் மல்ஹோத்ரா, சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி போன்ற தலைவர்களை பாஜகவுக்கு அளித்த மாநிலமும் டில்லிதான்.

தேசப் பிரிவினையால் பாதிக்கப்பட்ட ஹிந்து அகதிகளின் நம்பிக்கை நட்சத்திரமாக பாஜகவுக்கு முந்தைய பாரதிய ஜனசங்கம் இருந்தது. தலைநகரில் பெருமளவில் வசிக்கும் சீக்கியர்களும் அகாலிதளத்தின் நட்புக் கட்சியான பாஜகவை ஆதரித்து வந்தனர்.

ஆனால், உள்கட்சிப்பூசல்கள், ஊழல் புகார்களால் தனது பெருமையை பாஜக சிறுகச் சிறுக இழந்தது. அந்த இடத்தையே ஆம் ஆத்மி கட்சி 2013-இல் கைப்பற்றியது.

தற்போதைய டில்லி பாஜகவில் விஜேந்தர் குப்தா, ஹர்ஷ்வர்தன், கௌதம் காம்பீர், ஸ்மிருதி இரானி போன்ற தலைவர்கள் இருந்தாலும் அரவிந்த் கேஜரிவாலுக்கு நிகராக அவர்களால் மக்களை வசீகரிக்க முடியவில்லை.

இந்த உள்ளூர் தலைமை வெற்றிடத்தை நரேந்திர மோடியின் தனிப்பட்ட செல்வாக்கால் நிரப்ப இயலவில்லை. அதனால்தான் மக்களவைத் தேர்தலில் பாஜகவை ஆதரித்தாலும், சட்டப் பேரவையிலும் மாநகராட்சியிலும் ஆம் ஆத்மி கட்சியை டில்லி மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இத்தேர்தலில் குறைந்தபட்சம் 24 வார்டுகளில் ஆயிரம் வாக்குகளுக்கு உட்பட்ட வித்தியாசத்தில் பாஜக தோல்வியுற்றிருக்கிறது. அதுபோலவே ஆம் ஆத்மி கட்சியும் 24 வார்டுகளில் ஆயிரம் வாக்குகளுக்கு உட்பட்ட வித்தியாசத்தில் தோற்றிருக்கிறது. அதாவது மிகவும் பலத்த போட்டிக்கு இடையேதான் மாநகராட்சி நிர்வாகம் கைமாறி இருக்கிறது. எனவே புதிதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகிகள் கூடுதல் கவனத்துடன் செயல்பட்டாக வேண்டிய சூழல் நிலவுகிறது.

நரேந்திர மோடி என்ற தனிநபரின் செல்வாக்கை நம்பி இருக்கும் பாஜகவுக்கும், சரியான தலைமையின்றித் தள்ளாடும் காங்கிரஸ் கட்சிக்கும் எச்சரிக்கை விடுப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் வளர்ச்சி அமைந்திருக்கிறது என்று கூறினால் அது மிகையல்ல.

**(தினமணி)**



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழும், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழும், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

கல்வி tv CHANNEL-1

**17.12.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**17.12.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நிந்தவூரில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

நிந்தவூர், டிசெ. 16

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவை மூன்று தலைமுறையினரை ஒன்று சேர்க்கும் சாதனையாளர் கௌரவிப்பு விழா ஒன்றை நடத்தவிருக்கின்றது.

பேரவையின் கலை, இலக்கிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த சாதனையாளர் கௌரவிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையின் தலைவர் கவிஞர். டாக்டர் ஏ.எம்.ஜாபீர் தலைமையில் இன்று சனிக்கிழமை கௌரவிப்பு விழா நடைபெறும்.

நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் நிந்தவூரின் கலை, இலக்கிய ஆளுமைகளான மூவர் வாழ்நாள் சாதனையாளர் மற்றும் சாதனையாளர் விருதுகள் வழங்கி விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்படி நிந்தவூர் மண்ணுக்குப் பெருமை சேர்த்து வரும், இலங்கையின் தமிழ் இலக்கியப்பரப்பின் முதுபெரும் எழுத்தாளருமை, ஆய்வாளர், கவிஞர், கதைஞர் சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் எஸ்.முத்துமீரான், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியும், கல்வியலாளர், கவிஞர், பேச்சாளர் எஸ். அகமது சாதனையாளர் விருது வழங்கியும், இளைய தலை முறை எழுத்தாளரும், தேசிய விருதுகளைப் பெற்றவருமான பல்கலைக்கழக மாணவன் ஹஸன் குத்தூஸ் ஜெம்ஸித் சாதனையாளர் விருது வழங்கியும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் மூன்று தலைமுறையினரை ஒன்று சேர்க்கும் இந்த விழாவில் கௌரவிக்கப்படும் சாதனையாளர்கள் பற்றி முறையே கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக், சித்தி லெவ்வை ஆய்வுப் பேரவையின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.எண்.மர்சூம் மௌலானா, எம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ. எம்.றிம்சான் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றுவர்.

இதேவேளை புதிய அமைப்பான மாற்று அசைவியக்க நூலகத்திற்கென கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சார்பில் திணைக்கள மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.தௌபீக், நூல்கள் தொகுதி ஒன்றினை விழாவில் வைத்து அசைவியக்க தலைவர் இலக்கியன் முர்ஷித்திடம் கையளிக்கவுமுள்ளார்.

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவை தொடர்ச்சியான கலை, இலக்கிய நிகழ்வுகளை நடத்திவருவதுடன், கலை, இலக்கியவளர்ச்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து உயிரோட்டமுள்ள அமைப்பாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-06)

# கிழக்கில் மாணவர்களின் புத்தகப் பைகள் சோதனை

## போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக



மட்டக்களப்பு, டிசெ. 17

மட்டக்களப்பில் பொலிஸார் போதைப்பொருளை தடுப்பதற்காக விசேட நடவடிக்கையாக, பாடசாலை மாணவர்களை நேற்று முன் தினம் வியாழக்கிழமை சோதனைக்கு உட்படுத்தினார்கள்.

புனித மைக்கல் ஆண்கள் தேசிய பாடசாலையில் மோப்ப நாய்கள் சகிதம் மாணவர்களின் புத்தகப்பைகளைச் சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ராஜித ஸ்ரீ தமிந்த ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.பி ஹட்டியாராச்சி தலைமையில் நேற்று காலை 6.30 மணிக்கு, புனித மைக்கல் பாடசாலையின் வாசலில், சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை, ஏனைய பாடசாலைகளிலும் தொடரும் எனவும் மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோர் போதைப்பொருள் வியாபாரிகள், பாவிப்பவர்கள் தொடர்பாக அறிந்திருந்தால், உடனடியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறியத் தருமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (அ)

# கம்பத்தை அறுத்து மின்குமிழ் திருட்டு



மட்டக்களப்பு, டிசெ. 17

அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட அம்பாறை பிரதான வீதியில், பள்ளி குடியிருப்புக்கும் ஆலிம் நகருக்கும் இடைப்பட்ட இடங்களில் பொருத்தப்பட்ட சூரியசக்தி மின்குமிழ் கம்பத்தை அறுத்து, மின்குமிழ்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து அறிந்து இடத்துக்கு வருகை தந்த அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ றாஸிக் கருத்து தெரிவிக்கையில்-

இந்த இடங்களில் யானைக் கூட்டங்களின் வருகையையும் பிரயாணம் செய்கின்ற பொது மக்களின் அசௌகரியத்தையும் இரவு நேரங்களில் வேலை செய்கின்ற விவசாயிகளின் அத்தியாவசிய தேவையையும் கருதி, பெறுமதி வாய்ந்த சூரிய சக்தியில் இயங்குகின்ற மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை, பெரிய இரும்புக் குழாயை அறுத்து சாய்த்து விட்டு, அதில் பொருத்தப்பட்டிருந்த சூரிய சக்தி மின்விளக்குகள் திருடியுள்ளனர்.

இவ்வகையான தொடர் செயற்பாடுகள் நீடிக்குமாக இருந்தால், தண்டனை பெற்றுத் தரும் வகையில் பிரதேச சபையும் பொதுமக்களும் செயற்படுவார்கள்-என்றார். (அ)

# கல்முனை மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் வெற்றி



அம்பாறை, டிசெ. 17

கல்முனை மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் 17 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் வரவு- செலவுத் திட்டத்திற்கான விசேட சபை அமர்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 35 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

பட்ஜெட்டை சமர்ப்பித்து மாநகர முதல்வர் உரையாற்றியதைத் தொடர்ந்து உறுப்பினர்களின் கருத்துக்களையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 09 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 06 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 05 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 04 உறுப்பினர்கள், தேசிய காங்கிரஸின் ஒரு உறுப்பினரும் ஹெலிகொப்டர் சுயேச்சைக் குழுவின் ஒரு உறுப்பினர் மற்றும் மான் சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவருமாக 26 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 03 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 03 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 02 உறுப்பினர்களும் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

இறுதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து வருகை தந்திருந்தனர்.

வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களுக்கு முதல்வர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (அ-6)

# அட்டப்பளம் வீதி விபத்தில் அரச உத்தியோகத்தர் பலி!

அம்பாறை, டிசெ. 17

நிந்தவூர் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி அட்டப்பளம் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பைச் சேர்ந்த திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதம நிர்வாக சேவை உத்தியோகத்தராக கடமை யாற்றும் ஆ.சசிந்திரன் உயிரிழந்தார்.

இவர் சமய கலாசார ஆன்மீக விடயங்களில் கூடுதலான ஈடுபாடு கொண்டவர். உயிரிழந்தவரின் உடல் கல்முனை அஷ்ரப்வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# காரைதீவில் சிறப்பாக இடம்பெற்ற சாரததேவியின் ஜெயந்தி தினம்



அம்பாறை, டிசெ. 17

இராமகிருஷ்ண மிஷன் தூயஅன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரின் 170 ஆவது ஜெயந்தி தின விழா காரைதீவில் கடந்த புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த இல்லத்தில் அன்னையின் ஜெயந்தி விழா இடம் பெற்றது.

மணிமண்டபச் செயலாளரும் கலாசார உத்தியோகத்தருமான கு.ஜெயராஜ் தெய்வத் திருமூவருக்கு பஞ்சாரத்தி காட்டி விசேட பூசை நடத்தினார்.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தின் முன்னாள் தலைவர், வி.ரி.சகா தேவராஜா ஓய்வு நிலை அதிபர் கே.புண்ணிய நேசன், மட்டக்களப்பு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி. எழில்வாணி பத்மகுமார், காரைதீவு கலாசார உத்தியோகத்தர் திருமதி சிவலோஜினி மற்றும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)




# மலேசிய மண் சரிவில் சிக்கி 13 பேர் மரணம்!

## 79 பேருக்கு மேல் மாயம்

கோலாலம்பூர், டிசெ. 17
மலேசியாவில் சிலாகுர் மாநிலத்தில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் கோலாலம்பூருக்கு வடக்கே 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மத்திய சிலாங்கூர் மாநிலத்தில் சுற்றுலா பகுதியான படாங் கலி என்ற இடத்தில் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படும்போது 92 பேர் சம்பவ இடத்தில் இருந்ததாக மலேசிய தேசிய பேரிடர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் குறித்த மண்சரிவில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 79 பேர் மாயமாகியுள்ளனர்.

இதற்கிடையில், சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மார்ச் வரை மழை நீடிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சிலாங்குர் உட்பட பல மாநிலங்களில் கனமழை பதிவாகியுள்ளதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (அ)

# கெனடி கொலை ஆவணங்கள் முழுமையாக வெளியிடப்படும்

## வெள்ளை மாளிகை உத்தரவு



நியூயோர்க், டிசெ. 17
அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எவ் கெனடி கொலை தொடர்பான ஆயிரக் கணக்கான ஆவணங்களை முதன்முறையாக முழுமையாக வெளியிட வெள்ளை மாளிகை உத்தரவிட்டுள்ளது.

ஒன்லைனில் 13,173 கோப்புகள் வெளியிடப்பட்டதன் மூலம், சேகரிப்பில் உள்ள 97 சதவீதத்துக்கும் அதிகமான பதிவுகள் இப்போது பொதுவில் கிடைக்கின்றன என்று வெள்ளை மாளிகை கூறியது.

ஆவணங்களில் இருந்து பெரிய வெளிப்பாடுகள் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை, ஆனால் வரலாற்றாசிரியர்கள் கூறப்படும் கொலையாளியைப் பற்றி மேலும் அறிய நம்புகிறார்கள்.

நவம்பர் 22ஆம் திகதி 1963 ஆம் ஆண்டு டெக்சாஸின் டல்லாஸ் நகருக்குச் சென்றிருந்த போது கெனடி சுடப்பட்டார்.


1992ஆம் ஆண்டு சட்டம், ஒக்ரோபர் 2017ஆம் ஆண்டுக்குள் படுகொலை குறித்த அனைத்து ஆவணங்களையும் அரசாங்கம் வெளியிட வேண்டும்.

கடந்த வியாழக்கிழமை, ஜனாதிபதி ஜோ பைடன் சமீபத்திய வெளிப்பாட்டுக்கு அங்கீகாரம் அளிக்கும் ஒரு நிர்வாக ஆணையை வெளியிட்டார். ஆனால், அடையாளம் காணக்கூடிய தீங்கிலிருந்து பாதுகாக்க சில கோப்புகள் ஜூன் 2023ஆம் ஆண்டு வரை மறைத்து வைக்கப்படும் என அவர் கூறினார்.

515 ஆவணங்கள் முழுமையாக நிறுத்தி வைக்கப்படும் என்றும், மேலும் 2,545 ஆவணங்கள் பகுதியளவு நிறுத்தி வைக்கப்படும் என்றும் அமெரிக்க தேசிய ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

1964ஆம் ஆண்டு அமெரிக்க விசாரணை, வாரன் ஆணையம், சோவியத் ஒன்றியத்தில் முன்பு வாழ்ந்த அமெரிக்க குடிமகன் லீ ஹார்வி ஒஸ்வால்டால், கெனடி கொல்லப்பட்டார் என்றும் அவர் தனியாக செயல்பட்டார் என்றும் கண்டறிந்தது. அவர் கைது செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு டல்லாஸ் பொலிஸ் தலைமையகத்தின் அடித்தளத்தில் கொல்லப்பட்டார். (அ)

# பெற்றோரின் நலனுக்காக கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு கடிதம் எழுதிய சிறுமி!



லண்டன், டிசெ. 17
கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு சிறுவர்கள் கடிதம் எழுதுவது கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் பாரம்பரிய வழக்கமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இங்கிலாந்தில் வசிக்கும் எம்மி என்ற 8 வயது சிறுமி எழுதியுள்ள கடிதம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே சிறுவர்கள் எழுதும் கடிதம் அவர்களுக்கு பிடித்த பொம்மைகள் தொடங்கி பலவற்றையும் கேட்கும் வகையில் அமைந்துள்ளது. அதில் சில தன்னலமில்லாத வகையிலும் உள்ளது. அந்த வகையில் எம்மி எழுதியுள்ள கடிதமும் இடம் பெற்றுள்ளது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அதில் தனது தாய்-தந்தையின் கடனை அடைக்கப் பணம் அனுப்பு மாறு கிறிஸ்மஸ் தாத்தாவிற்கு 8 வயது சிறுமி எம்மி கடிதம் எழுதி உள்ளார்.

கிறிஸ்மஸ் தாத்தாவிடம் பொம்மைகள், இனிப்புகள் கேட்டும் சிறுவர்களிடையே எம்மி, தாய் - தந்தைக்காக பணம் கேட்டு எழுதிய கடிதம் இணையத்தில் வைரலாகி வருகிறது. (அ)

# கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு உக்ரைனில் போர் நிறுத்தம் இல்லை!

## ரஷ்யா அறிவிப்பு



மொஸ்கோ, டிசெ. 17
கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, உக்ரைனில் போர் நிறுத்தம் இல்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, ஐரோப்பாவில் மிகப்பெரிய போராக, ரஷ்யா-உக்ரைன் போர் பார்க்கப்படுகிறது.

போர் தொடங்கி 10 மாதங்கள் நிறைவடைய உள்ள நிலையில், இதனை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக, கிறிஸ்துமஸிற்குள் ரஷ்யா படைகளை திரும்பப்பெறும் நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் போர் நிறுத்தத்திற்கான எந்த திட்டமும் இதுவரை இல்லை என, ரஷ்ய ஜனாதிபதி அலு வலக செய்தித்தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார். (அ)

# தாய்லாந்தின் இளவரசி இதய நோயால் பாதிப்பு



பாங்கொக், டிசெ. 17
தாய்லாந்து மன்னரின் மூத்த மகள் இதய நோயால், சரிந்து விழுந்ததாக தாய்லாந்து அரச அரண்மனை தெரிவித்துள்ளது.

மன்னன் வஜிரலோங்கோர்னின் மூத்த மகளான இளவரசி பஜ்ரகித்தியபா, கடந்த புதன்கிழமை மாலை பாங்கொக்கின் வட கிழக்கில் தனது நாய்களுக்கு பயிற்சி அளிக்கும்போது சரிந்து விழுந்ததாக அரண்மனை குறிப்பிட்டுள்ளது.

44 வயதான அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், பின்னர் ஹெலிகொப்ரர் மூலம் பாங்கொக்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

அரண்மனை அவரது உடல் நிலையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நிலையானது என்று விபரித்தது. தாய்லாந்தில் உள்ள அரச அரண்மனையின் மருத்துவ அறிக்கைகள் பொதுவாக தெளிவற்றதாகவும், ரகசியமாகவும் இருக்கும், மேலும் இளவரசி பஜ்ரகித்திய பாவைப் பற்றி வெளியிடப்பட்ட ஒற்றை அறிக்கையிலிருந்து, அவரது உடல்நிலை எவ்வளவு மோசமாக உள்ளது என்பதைக் கணக்கிடுவது கடினம் என்று கூறப்படுகின்றது.

தற்போது அவரது உடல்நிலை குறித்து அறிக்கை எதுவும் கூற வில்லை. சில அறிக்கைகள் கூறியதை விட இது மிகவும் தீவிரமானது என்று பரிந்துரைத்துள்ளது.

இளவரசி ராஜாவின் முதல் மனைவி இளவரசி சோம்சவலியின் மகள் மற்றும் அவரது மூத்த குழந்தை. அவர், 2016இல் மன்னர் பூமிபோல் பதவிக்கு வந்ததிலிருந்து அவரது தந்தையின் நெருங்கிய வட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகிறார். மேலும் மன்னரின் தனிப்பட்ட காவலில் மூத்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இரண்டு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற அவர், உள் அரச வட்டத்தில் மிகவும் சிறப்பாகச் சாதித்தவர்.

மன்னர் வஜிரலோங்கோர்ன் இன்னும் அரியணைக்கு ஒரு வாரிசை நியமிக்கவில்லை, ஆனால் இளவரசி பஜ்ரகித்தியபா மிகவும் பொருத்தமான வாரிசாக பரவலாக பார்க்கப்படுகிறார்.

முறையான பட்டங்களைக் கொண்ட மன்னரின் மூன்று குழந்தைகளில் ஒருவரான அவர், 1924 அரண்மனை வாரிசுச் சட்டத்தின் கீழ் அரியணைக்கு தகுதியானவர்.

அவர் உடற்தகுதி ஆர்வலர் மற்றும் தாய்லாந்தில் தண்டனை சீர்திருத்தத்தை ஆதரிப்பதில் நீண்ட சாதனை படைத்துள்ளார். மேலும், அவர் 2012 முதல் 2014ஆம் ஆண்டு வரை ஆஸ்திரியாவில் தாய்லாந்து தூதராக இருந்தார். (அ)

# பிரான்ஸ் கட்டடம் ஒன்றில் தீ விபத்து!

## 5 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழப்பு



பாரிஸ், டிசெ. 17
பிரான்ஸின் லியோன் நகருக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இறந்தவர்களில் 5 சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதுடன், சுமார் 170 தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர களமிறக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தீ பரவிய கட்டிடம் ஏழு மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு எனவும், நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்கள் சேவையை நிறைவேற்ற தவறியமைக்கு அரச உத்தியோகத்தர்கள் காரணம் கூறக்கூடாது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 17

**அரச நிறுவனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை உருவாக்காத வகையில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையைப் பெற்றுக் கொடுப்பது அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகுமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச உத்தியோகத்தர்கள் ஒருபோதும் காரணங்களை முன்வைக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.**

அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே சட்டங்கள் மற்றும் சட்டக்கோவைகளை கேடயமாகப் பயன்படுத்தவேண்டுமே தவிர நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பதுளை மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரச அதிகாரிகள் திறமையாக செயல்படவேண்டும். எனக்கு காரணங்கள் தேவையில்லை. அரச திணைக்களங்களுக்கிடையே பிரச்னைகள் ஏற்பட வழியில்லை. அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டும்.

பெருந்தோட்டத் துறையில் சில அதிகாரிகள் சட்டக் கோவைகளை கேடயமாக வைத்துக் கொண்டு செயற்படுகின்றனர். 80 களில் இந்தச் சட்டத்தை தயாரிக்கும்போது இது குறித்து நான் கவனம் செலுத்தினேன்.

இப்பிரதேசத்திலுள்ள கல்வி தொடர்பான பிரச்னைகள் குறித்து கலந்துரையாடியபோது, ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிடப்பட்டது.

ஆசிரியர் நியமனங்களைப் பெற்று, ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே நியமனம் பெற்று ஐந்து வருடங்களுக்கு இடமாற்றங்களை வழங்காமை தொடர்பில் கல்வியமைச்சும் மாகாண சபையும் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

## பாராளுமன்றத் தேர்தலுக்காக ஜே. வி. பி அவசரப்படுவது ஏன்?

கொழும்பு, டிசெ. 17

பாராளுமன்றத் தேர்தலை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி வலுக்கட்டாயமாகக் கோருவதற்கான காரணத்தை தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசியல் களநிலவரத்தின்படி ஐக்கிய மக்கள் சக்தி முதலாமிடத்திலும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இரண்டாமிடத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ('மொட்டு'க் கட்சி) மூன்றாமிடத்திலும் உள்ளன.

ஜே.வி.பி. இரண்டாமிடத்தில் இருந்தாலும்கூட ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஜே.வி.பிக்குமான இடைவெளி அதிகம் என்பதால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைவிட பாராளுமன்றத் தேர்தலே பொருத்தமாக இருக்கும் எனக் கருதி கணக்குப் போட்டு நாடாளுமன்றத் தேர்தலையே ஜே.வி.பி. கோரி வருகின்றது என்று தென்னிலங்கை ஊடக செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாம்!

கொழும்பு, டிசெ. 17

போதிய மழைவீழ்ச்சியின் காரணமாக நீரமின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் 90 வீதத்துக்கும் அதிகமாக இருந்த நீர்மட்டம் தற்போது 75 வீதமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை கூறுகிறது.

இந்த நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் 70 வீதமாகக் குறைந்தால் மின்சார விநியோகம் நெருக்கடியாகிவிடும் என்று வாரியத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பிரதான நீர்மின் நிலையங்களைச் சுற்றியுள்ள நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதாக அவர் கூறினார்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் மின்வெட்டு காலத்தை அதிகரிக்க வேண்டிவரும் என மின்சார சபை எச்சரிக்கை விடுத்திருந்தது. (அ)

## போதைப்பொருள் விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

மதுசார மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையுடன் இணைந்து முன்னெடுத்த மதுசார மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வுக் குறும்படப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

"இளைஞர்கள் மத்தியில் மது மற்றும் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதில் திரைப்படங்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, அதனைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இக்குறும்படப் போட்டி நடத்தப்பட்டிருந்தது.

இக் குறும்படப் போட்டிக்காக முப்பது குறும்படங்கள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் எட்டு சிறந்த குறும்படங்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.



இக்குறும்படப் போட்டியில் செல்வகுமார் ரினோஷன் முதலாம் இடத்தினைப் பெற்று ரூபா 50,000 பணப்பரிசினையும், டி.திஷான் தலைமையிலான குழுவில் டி. தவதேவன், என். நிரோஷாந், ஆர்.தர்ஷினி ஆகியோர் இரண்டாம் இடத்தினைப் பெற்று ரூபா 30, 000 பணப்பரிசினையும், ஆர். பெனயா மூன்றாம் இடத்தினைப் பெற்று ரூபா 20, 000 பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர். எஸ். ரகுராம், மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் மையத்தின் நிர்வாக இயக்குனர் G.G.J. சுமணசேகர ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

## ரணில் அரசில் அமைச்சுப் பதவி ஏற்பதில்லை என்பது என் முடிவு!

### நாமல் ராஜபக்ஷ அதிரடி அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 17

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற உடனேயே நான் எந்த வொரு அமைச்சுப் பொறுப்பையும் ஏற்கக் கூடாது என முடிவு எடுத்துவிட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன்போது, நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்தபோது ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே நாமல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் கோட்டாய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் இருந்து விலகினேன். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டபோது நான் அமைச்சரவைக்கு வருவதில்லை என்று கூறினேன் - என்றார். (அ)

## லிட்ரோ எரிவாயு விலை குறையும்?





கொழும்பு, டிசெ. 17

லிட்ரோ சமையல் எரிவாயு வின் விலை குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நம்பத்தகுந்த வட்டாரங்கள் களை மேற்கோள் காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் 12.5 கிலோ லிட்ரோ சமையல் எரிவாயு 250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

தற்போது 200 ரூபாய் அளவில் இதன் விலை இந்த வாரம் குறைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பண்டிகைக் காலத் தில் நுகர்வோருக்கு தடையில்லாமல் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்ய முடியும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் குறிப்பிட்டார். (அ)

## போதை மாத்திரைகளுடன் யாழில் பெண் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 17

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலங்காடு பகுதியில் 79 போதை மாத்திரைகளுடன் 49 வயதுப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். குறித்த பெண், வீட்டில் போதை மாத்திரைகள் வைத்திருப்பதாக சுன்னாகம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து சுன்னாகம் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேலதிக விசாரணைகளின் பின் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முன்னாள் போராளிகள் 31 பேரை விடுதலை செய்யவேண்டும் அரசு

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, டிசெ. 17

**தற்போது சிறைச்சாலையில் உள்ள முன்னாள் போராளிகளை விடுதலை செய்யவேண்டும் என 43ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி தலைவர்களுடனான மாநாடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வகட்சி தலைவர்கள் மாநாட்டில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுக்கப்படவேண்டும், சிறைச்சாலைகளில் உள்ள முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவேண்டும், காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் இந்த பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களாகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் அந்த இயக்கத்துக்கு தலைமை ஏற்றிருந்த குமரன் பத்மநாதன் வெளியில் இருக்கிறார்.

ராமன், நகுல், கருணா போன்றவர்களும் வெளியில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் சிறைச்சாலையில் உள்ள 31 முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும்.

அத்துடன், சிறைச்சாலையில் உள்ள இராணுவ வீரர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

மேலும் அரசியலமைப்பு தொடர்பில் இதன்போது பேசப்பட்டது. அது தொடர்பில் பாராளுமன்றத்துக்குள்ளேயே தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# உள்நாட்டு உற்பத்தி 11.8 வீதமாக சுருக்கம்!

கொழும்பு, டிசெ. 16

இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில், (ஜூலை - செப்ரெம்பர்) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11.8 வீதமாக சுருங்கியுள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் (ஏப்ரல் - ஜூன்), மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4வீதமாக சுருங்கியது.

மூன்றாம் காலாண்டில் விவசாயம் 8.7வீத மற்றும் தொழில் துறை 21.2வீத சுருங்கியது.

அதே சமயம் சேவைகள் 2.6வீத குறைந்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 16.4 வீதமாக சுருங்கியது. அதன்பிறகு, ஒரு காலாண்டில் இலங்கை அனுபவித்த இரண்டாவது மோசமான பொருளாதார சுருக்கம் இதுவாகும் என்று பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிக பணவீக்கம், மின் வெட்டு, அதிக வட்டி விகிதங்கள், இறக்குமதி பற்றாக்குறை மற்றும் எரிபொருள் மற்றும் உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணிகள் கடந்த காலாண்டில் வளர்ச்சியை பாதித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மக்களின் உண்மையான வருமானம் குறைவதால் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசிய மற்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் தேவை குறைவது பொருளாதாரத்தை இந்த சரிவை நோக்கிச் செலுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து ரிட் மனுக்கள் விசாரணைக்கு

கொழும்பு, டிசெ. 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாக்கல் செய்த 2 ரிட் மனுக்களை ஜனவரி 18ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தாக்கல் செய்த மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போதே இந்த மனுக்களை ஜனவரி 18ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த திங்கட்கிழமை, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரால் ஒரு மனுவும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரால் மற்றைய மனுவும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (அ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் 6 மாதங்கள் தாமதிக்கலாம்?



கொழும்பு, டிசெ. 17

எல்லை நிர்ணயத்தின் பின்னர் தேர்தல் நடத்தப்பட்டால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மேலும் 6 மாதங்களுக்கு பிற்போடப்படும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் 20ஆம் திகதி அரசியல் கட்சிகளுடன் எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார வரம்புகளை வரையறுக்கும் வகையில் கடந்த நவம்பர் மாத தொடக்கத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த எல்லை நிர்ணய குழுவை நியமித்தார்.

தற்போதைய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5 ஆயிரத்து 100 முதல் 5 ஆயிரத்து 200 வரை குறைக்க முடியும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தாக்கல் செய்த மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. (அ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மூன்றாம் சுற்று பேச்சு நிறைவு

கொழும்பு, டிசெ. 17

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பான 03ஆவது சுற்று கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. வெளிப்படையான கடன் மறுசீரமைப்பு கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்க விரும்பு வதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் விரிவான கடன் தொகையை வழங்குவதில்லை என சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

டிசெம்பர் மாதத்தில் குறித்த கடன் தொகையை விநியோகிப்பதற்கான அனுமதி வழங்கப்படாமையே தாமதத்துக்கான காரணம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பாடசாலையில் தொடர் களவு: விசுவமடுவில் சிக்கிய கும்பல்!

முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக களவு நடவடிக்கையில் ஈடுபட்ட கும்பலை புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் மின்மோட்டார் உட்பட பல பொருட்கள் தொடர்ச்சியாக காணாமல்போயுள்ளன.

இந்த களவு நடவடிக்கையில் குறித்த பகுதியில் வாழும் சில போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனை அடுத்து குறித்த கும்பல் கையும் களவுமாக பிடிபட்டது .

அவர்களிடமிருந்து களவாடப் பொருட்கள் பல மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

கொழும்பு, டிசெ. 17

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசனின் தலைமையிலான இந்த கட்சிக்கு தபால்பெட்டி சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

பலவருடச் செயற்பாடுகளுக்கு மத்தியில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அரசியல் கட்சியாக அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற் THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN NEWS

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

## நான் சொன்னது....

தெரிவித்துள்ளார்.

டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் இன்றிரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள நெற்றிக்கண் நிகழ்ச்சிக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இதில், உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுவது குறித்து தொழில்நுட்ப ரீதியாக ஆராயப்பட்டதாக சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, கூட்டமைப்பை விட்டு எந்தத் தரப்பு பிரிந்து சென்றாலும், நாங்கள் கூட்டமைப்பாக செயல்படுவோம் என்று புளொட் கட்சியின் கஜதீபன் தெரிவித்தார். இதையடுத்து, உள்ளூராட்சி தேர்தலில் அதிகவட்டாரங்களை வெல்ல தொழில்நுட்ப ரீதியாக ஆராய்வதாகவும், பங்காளி கட்சிகளின் தலைவர்களுடனும் கலந்துரையாடியதாகவும் கஜதீபன் விடயம் தெரியாமல் கதைக்கிறார் என்றும் சுமந்திரன் எம். பி. குறிப்பிட்டார்.

இந்நிலையில், சுமந்திரனின் கருத்து தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த கஜதீபன், “அடுத்த தேர்தலை பற்றி நினைப்பவர் சாதாரண அரசியல்வாதியாக மட்டுமே இருக்கலாம். ஆனால், அடுத்த தலைமுறையை பற்றி நினைப்பவர் சித்தார்த்தன். அவர்தான் எமது கட்சி தலைவர்.

ஆனபடியால், ஓர் ஆசனம் அங்கு கிடைக்கும், ஓர் ஆசனம் இங்கு கிடைக்கும் என மக்களின் நம்பிக்கையை பெற, தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இவ்வளவு காலமாக வாக்களித்த மக்களை ஏமாற்றிவிட்டு செல்ல முடியாது.

நாங்கள் ஒரு கட்டமைப்பாக இயங்குவோம். இந்தக் கட்டமைப்பில் விருப்பமில்லாதவர்கள் வெளியேறிச் செல்லலாம்.

எனக்கு தெரியாமல் நான் கதைக்கவில்லை. எமது கட்சி தலைவர் சித்தார்த்தனுக்கு அரசியல்ரீதியாக என்ன விடயம் தெரிந்தாலும், நான் உட்பட கட்சியிலுள்ள எல்லா முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடுவார். தனித்து போட்டியிடுவது பற்றி சுமந்திரன் தெரிவித்த கருத்து பத்திரிகைகளில் வெளியானதைத் தொடர்ந்து, நான் சித்தார்த்தனின் வீட்டுக்கு சென்றேன். கட்சியின் முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் இதைப்பற்றி கலந்துரையாடினோம்.

ஒரு சில தேர்தல் ஆதாயங்களுக்காக கட்டமைப்பை உடைக்க முடியாது, அடிமட்ட மக்களை குழப்பமடைய வைத்துவிட்டு, மீண்டும் ஒன்று சேர்த்து செயல்படுவது சாத்தியமற்றது என்று இதன்போது பேசி தீர்மானித்தோம்.

நாங்கள் விரிவாக இன்னொரு விடயத்தையும் ஆராய்ந்தோம். 2018 உள்ளூ

## மீண்டும்....

சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசனின் நுகேகொடை இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில், பொருளாதார நெருக்கடிக்கு பசுமையான தீர்வுகளைக் கண்டறிவதற்காகவும் முதலீடுகள், காற்றாலை மின்சாரம், சூரிய சக்தி மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்னைகளில் உதவுவதற்காகவும் ஜனாதிபதி விக்ரமசிங்கவின் அழைப்பின் பேரில் தான் இலங்கை வந்துள்ளார் என்று எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த காலத்தில் - 2000 - 2003ஆம் ஆண்டுகளில் விசேட தூதுவராக செயல்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம்.

இந்நிலையிலேயே, இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக எரிக் சொல்ஹெய்மை நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ராட்சி தேர்தலில் கிட்டத்தட்ட 30 வீதமான வாக்குகளைத்தான் பெற்றோம். நாங்கள் 50 வீதத்துக்கு அதிக வாக்குகளை பெற்றிருந்தால், சபைகளில் நெருக்கடியில்லாமல் ஆட்சி அமைத்திருக்கலாம்.

அப்படியான பொறிமுறையை உருவாக்க நாங்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். வாக்கு குறைந்ததற்கு என்ன காரணமென்பதை ஆராயாமல், வெறுமனே தொழில்நுட்ப ரீதியிலான காரணங்கள் எனக் கூறி தொழில்நுட்பத்தின்மீது பழியை போட்டு விட்டு நாங்கள் வேலை செய்ய முடியாது.

நாங்கள் தேசியரீதியாக தேர்தல் முறையை மாற்ற வேலை செய்ய வேண்டும். அடிமட்டத்தில் இன்னும் பலமான அடித்தளத்தை உருவாக்கி, மற்ற தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்து செயல்பட வேண்டும்.

பூநகரியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஊர்காவற்துறையில் ஈ. பி. டி. பி. ஆட்சியமைத்த உதாரணங்கள் உள்ளன. நாங்கள் ஏனைய இடங்களிலும் தனித்து ஆட்சியமைக்கலாம்.

பல வட்டாரங்களில் ஒன்று இரண்டு வாக்குகளால்தான் வெற்றியடைந்துள்ளோம்.

சமூகத்துக்கு ஒவ்வாத கருத்துக்களை கூறிக்கொண்டு, சமூகத்தை தவறாக வழிநடத்திக் கொண்டு, பேச்சுக்கு சென்றதே துரோகம் என கூறிக்கொண்டுள்ள தரப்புக்களை வளர்த்து விடும் ஏற்பாடுகளையே நாம் செய்யப் போகிறோம். அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் கட்சிகளும் வளர்ந்து விடும். நாம் அப்படி செயல்பட முடியாது.

எங்களுக்கு பெரிய எதிர்பார்ப்புக்கள் இல்லை. யாழ். மாவட்டத்தில் எமக்கு 2 எம்.பிக்கள். கிளிநொச்சியை மையப்படுத்தித்தான் சிறீதரன் வாக்கு எடுக்கிறார் என்றால், யாழ்ப்பாணத்தில் 2 பேர் தான் - சித்தார்த்தனும், சுமந்திரனும்தான் எம். பிக்கள். ஆனால், எமக்குள்ள பிரதேசசபை ஒன்று மட்டும்தான். சிலவேளை நாம் இழக்கலாம் அல்லது இன்னும் பலவற்றை கைப்பற்றலாம். அதனால் எமக்கு பெரிய எதிர்பார்ப்புக்களில்லை.

ஒற்றுமையை குலைக்கும் தவறான முன்னுதாரங்களை அடுத்த தலைமுறைக்கு காண்பிக்கக் கூடாது என்பதற்காக இப்படியான முன்மொழிவுகளை எதிர்க்கிறோம். எமது ஆட்களை பதவியில் இருத்த வேண்டும் என்பதலோ அல்லது வேறு காரணங்களாலோ அல்ல.

நான் அறிவித்தது கட்சியின் முடிவுதான். நாங்கள் கட்சியாக ஆராய்ந்த பின்னர் அதன் முடிவை அறிவித்தேன்” என்றார்.

நெற்றிக்கண் நிகழ்ச்சியை நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு டான் செய்திகள் அலைவரிசையிலும் பார்க்க முடியும். (ஐ)

## இந்திய....

தைப் பெற்றுள்ளன. இதற்காக இந்திய ரூபாயில் பரிவர்த்தனை செய்வதற்கு ”வொஸ்ட்ரோ” என்ற திட்டம் தொடங்கப்படவுள்ளது.

இதன்படி, இலங்கையும் வர்த்தக கொடுக்கல் - வாங்கல்களுக்கு அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும்.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஜூலை மாதம் இந்த முறையை அறிமுகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொழிலதிபர்....

தோமஸ் 138 கோடி ரூபாயை கடனாகப் பெற்றுள்ளார். இந்தக் கடனைப் பெறுவதற்காகவே அவர் வீட்டிலிருந்து புறப்பட்டிருந்தார். இது தொடர்பில், தனது மனைவியிடமும் செயலாளரிடமும் தெரிவித்தும் இருந்தார்.

இறுதியாக, தினேஷ் ஷாப்டரின் கைபேசியிலிருந்து பிரைன் தோமஸூக்கே அழைப்பு சென்றிருந்தது. இது தொடர்பிலும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்நிலையில், இந்தக் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## போரில்....

அறிக்கை மீதான மேல் நீதிமன்றின் தீர்ப்பு நேற்று வழங்குதவாக இருந்தது. இந்நிலையில், அந்தத் தீர்ப்பு தயாரித்து முடிக்கப்படாத நிலையில் தீர்ப்பை எதிர்வரும் பெப்ரவரி 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, நேற்று நடைபெற்ற வழக்குகளில் 5 வழக்குகளின் விசாரணைகளில் முதலாவதில், குறிப்பிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பான மனுதாரரின் வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் இது தொடர்பில் இராணுவத்தினர் திருப்திகரமான பதிலை முன்வைக்கவில்லை என்று தெரிவித்தது.

மனுதாரர் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், காணாமல் ஆக்கப்பட்டவர் இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதனை மறுப்பதற்கான விடயங்களை இராணுவத்தினர் மன்றில் இன்று (நேற்று) முன்வைக்கவில்லை என மனுதாரர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

எனவே, மனுதாரரின் வேண்டுகோளின் பிரகாரம், ஆட்கொணர்வு

## பரந்த....

மையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மட்டுமல்ல கூட்டணி சம்பந்தமாக 15 கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் பரந்தப்பட்ட கூட்டணி அமையும். இதேபோல புதிய அமைச்சரவையும் விரைவில் நியமிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பிரபல தமிழ்....

பட்ட இந்தச் சம்பவம் தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலும் பெரும் கேள்வியை எழுப்பியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தினேஷ் ஷாப்டர் நேற்று முன்தினம் 138 கோடி ரூபாய் கடன்தொகையை பெற்று வருவதாக மனைவியிடம் கூறிவிட்டு வீட்டை விட்டுச் சென்றுள்ளார். குறிப்பிட்ட நேரம் கழித்து அவரின் மனைவி அவரின் கைபேசிக்கு அழைப்பு எடுத்துள்ளார். அச்சமயம், அவரின் கைபேசி செயலிழந்து இருந்துள்ளது.

இதையடுத்து, அவரின் மனைவி அவர் எங்கிருக்கிறார் என்பதை அறியும் செயலி மூலம் தேடியுள்ளார். அவர் பொரளை கனத்தை மயானத்தில் இருப்பதாகக் காட்டியுள்ளது. இதனால், சந்தேகமடைந்த அவர், தமது நிறுவனத்தின் அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு விடயத்தைக்கூறி அங்கு சென்று பார்க்குமாறு கூறியுள்ளார்.

அந்த அதிகாரி உடனடியாகவே பொரளை மயானத்துக்கு சென்றுள்ளார். அங்கு அவரின் வாகனம் நின்றுள்ளது. விரைந்து செயல்பட்ட அதிகாரி வாகனத்தை சோதனையிட்டபோது தினேஷ் ஷாப்டரும் அவரின் கார் சாரதியும் கட்டப்பட்ட நிலையில் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

தினேஷ் ஷாப்டர் கொட்டனால் தாக்கப்பட்டும் - கம்பியால் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையிலும் படுகாயமடைந்திருந்தார். அவரின் மரண பரிசோதனை அறிக்கையிலும் இந்தக் காயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இருவரும் உடனடியாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட தினேஷ் ஷாப்டர் நேற்று முன்தினம் நள்ளிரவை நெருங்கியவேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை கொல்லப்பட்ட தினேஷ் ஷாப்டர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முன்னாள் தவிசாளர் சந்திரா ஷாப்டரின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மனுவின் எழுத்தாணையை அனுமதித்த நீதிமன்றம், அடுத்த தவணையில் காணாமல் ஆக்கப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான காரணங்களை விளக்க வேண்டும் என்று இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டது.

இதனிடையே, மற்றைய வழக்கில் மனுதாரர் போதுமான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்காதமையால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏனைய மூன்று வழக்குகள் மீதான தீர்ப்புகளையும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அறிவிக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல் மேலும் தெரிவித்தார். (ஐ)

## புது வருடத்தில்....

மோடு யார் இருக்கிறார்கள் என்பது தெரியவரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தின் ஜெய சிறீ மகா போதியில் வழிபாடுகளை மேற்கொண்டப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் இணைந்து செயல்பட தீர்மானித்தோம். அப்போது எனக்கு ஜனாதிபதி பதவியும் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதிவியும் கிடைத்தது. எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை - பிரதமர் பதவியும் இல்லை என்றார்.

கூட்டணி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் நாளில் எம்மோடு யார் இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிந்துகொள்வார்கள்.

எமது கட்சியை விட்டுச் சிலர் சென்றுவிட்டார்கள் என்பதால் எமது கட்சிக்குள் எந்தவிதமான பிரச்னைகளும் ஏற்படவில்லை. கட்சியில் ஏற்பட்டிருந்த வெற்றிடங்களுக்கு திறமையான - அறிவார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சியைப் பலப்படுத்தும் வேலைகளையே தற்போது செய்து வருகிறோம். ஜனவரி முதல் மக்களுக்கு எமது புதிய வேலைத்திட்டங்களை அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

## இணைந்த....

யிட்டுள்ள அவர் அதில்,

இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தாம் கரிசனை கொண்டுள்ள போதிலும், அதுவே முஸ்லிம் சமூகத்துக்கு பிரச்னையாகிவிடக்கூடாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி கோரும் தரப்புக்கள் இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் என்னவென்பது பற்றி மனம் திறப்பது அவசியம். முஸ்லிம் மக்களின் மனநிலையை புரிந்துகொண்டு பேசுவதே சிறந்தது.

வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் இருப்பாரேயானால், வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்போகும் அரசியல் தீர்வை அவர் தெளிவுபடுத்த வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் ஹக்கீமுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் இதுவரை காலமும் இரகசியமாக நடத்தப்பட்ட பேச்சுகள் வெளிக்கொணரப்படுவது அவசியம்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிந்திருக்க வேண்டுமென ஹக்கீம் கூறுவாரேயானால், அந்தந்த மாகாணங்களில் கையகப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், காணிகளின் எல்லை பிரச்னைகளும் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இந்த விடயத்தில் கடைப்பிடிக்கும் மௌனமும் கலைக்கப்பட வேண்டும் - என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



# இறுதிக் கட்டத்தை எட்டும் எல். பி. எல்!

கொழும்பு, டிசெ. 17

சிறீ லங்கா கிரிக்கெட் சபை நடத்தும் 3ஆவது எல். பி. எல். இருபது - 20 தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. கடைசிக் கட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இந்த மூன்று தினங்களில் தலா 2 போட்டிகள் வீதம் முதல் சுற்றில் எஞ்சியுள்ள 6 போட்டிகள் நடைபெறவுள்ளன.

அம்பாந்தோட்டை, மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கிலும் கண்டி, பல்லேகலை சர்வதேச விளையாட்டரங்கிலும் நடைபெற்று முடிந்த 14 போட்டிகளின் அடிப்படையில் கண்டி பல்கன்ஸ் 6 போட்டிகளில் 10 புள்ளிகளுடன் அணிகள் நிலையில் முதலாம் இடத்திலும் நடப்பு சம்பியன் யாழ்ப்பாணம் கிங்ஸ் 8 புள்ளிகளுடன் 2ஆம் இடத்திலும் இருப்பதுடன் இறுதிச் சுற்றில் விளையாடுவதையும் உறுதி செய்துகொண்டுள்ளன.

6 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலுள்ள கொழும்பு ஸ்ரார்ஸ் அணிக்கு இன்னும் ஒரு வெற்றி கிடைத்தால் அந்த அணியும் இறுதிச் சுற்றில் விளையாட தகுதி பெற்றுவிடும்.

காலி கிளாடியேற்றர்ஸ் 4ஆம் இடத்திலும் தம்புள்ளை ஔரா ஒரு வெற்றியைத்தானும் பெறாமல் கடைசி இடத்திலும் இருக்கின்றன.

இந்த சுற்றுப் போட்டியில் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் கண்டி பல்கன்ஸ் வீரர்கள் முன்னிலையில் இருக்கின்றனர்.

கண்டி பல்கன்ஸ் அணியைச் சேர்ந்த அண்ட்ரே ப்ளெச்சர் 6 போட்டிகளில் ஒரு சதத்துடன் 220 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்று துடுப்பாட்டத்தில் பிராகாசித்துள்ளார். அவர் மாத்திரமே இந்த வருட லங்கா பிறீமியர் லீக் போட்டியில் சதம் குவித்த வீரராவார்.

யாழ்ப்பாணம் கிங்ஸ் வீரர் அவிஷ்க பெர்னான்டோ 2 அரைச் சதங்களுடன் 210 போட்டிகளைப் பெற்று 2ஆம் இடத்திலும் இதே அணியைச் சேர்ந்த சதீர சமரவிக்ரம 5 போட்டிகளில் ஒரு அரைச் சதத்துடன் 194 ஓட்டங்களைப் பெற்று 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

கண்டி பல்கன்ஸ் வீரர் பதும் நிசங்க (192 ஓட்டங்கள்), காலி கிளாடியேற்றர்ஸ் அணித் தலைவர் குசல் மெண்டிஸ் (177 ஓட்டங்கள்), கொழும்பு ஸ்ரார்ஸ் வீரர் தினேஷ் சந்திமால் (167 ஓட்டங்கள்), கண்டி பல்கன்ஸ் வீரர் அஷேன் பண்டார (154 ஓட்டங்கள்) ஆகியோரே 150க்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ள மற்றைய துடுப்பாட்டக்காரர்கள் ஆவர்.

பந்துவீச்சில் கண்டி பல்கன்ஸ் வீரர் கார்லோஸ் பிராத்வெய்ட் 15 விக்கெட்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

நுவன் துஷார (காலி) வனிந்து ஹசரங்க டி சில்வா (கண்டி) ஆகிய இருவரும் தலா 9 விக்கெட்களையும் ஜேம்ஸ் புல்லர் (யாழ்ப்பாணம் கிங்ஸ்), விஜயகாந்த் வியாஸ்காந்த் (யாழ்ப்பாணம் கிங்ஸ்) ஆகிய இருவரும் தலா 8 விக்கெட்களையும் கைப்பற்றி முறையே 2, 3, 4, 5ஆம் இடங்களில் உள்ளனர்.

இறுதிச் சுற்று

3ஆவது லங்கா பிறீமியர் லீக் இருபது 20 கிரிக்கெட் அத்தியாயத்தின் இறுதிச் சுற்று டிசெம்பர் 21, 22ஆம் திகதிகளிலும் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி 23ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.




# புஜாரா, ஷப்மன் கில் சதம் வங்கத்துக்கு இமாலய இலக்கு!

சட்டோகிராம், டிசெ. 17

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்திய அணி 2ஆவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதனால், முதல் டெஸ்டை பங்களாதேஷ் அணி வெற்றி பெற 513 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சட்டோகிராமில் நடைபெற்று வரும் டெஸ்டில் நாணயச் சுழற்சியல் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இந்திய அணி முதல் இனிங்ஸில் 133.5 ஓவர்களில் 404 ஓட்டங்கள் எடுத்தது. ஷ்ரேயாஸ் ஐயர் 86, அஸ்வின் 58 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

தைஜுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் தலா 4 விக்கெட்களை வீழ்த்தினார்கள். இரண்டாம் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி தனது முதல் இனிங்ஸில் 44 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 133 ஓட்டங்கள் எடுத்தது.

மெஹித் ஹசன் 16, எபடாட் 13 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள். பங்களாதேஷ் அணி 2 விக்கெட்கள் மீதமிருந்த நிலையில் 271 ரன்கள் பின்தங்கியிருந்தது.

3ஆவது நாளான நேற்று பங்களாதேஷ் அணி 55.5 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. எபடாட் 17 ஓட்டங்களில் குல்தீப் பந்திலும் மெஹிதி 25 ஓட்டங்களில் அக்ஷர் பட்டேல் பந்திலும் ஆட்டமிழந்தார்கள்.

குல்தீப் யாதவ் 5 விக்கெட்களையும் சிராஜ் 3 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள். இந்திய அணி முதல் இனிங்ஸில் 254 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதால் ஆட்டத்தை பங்களாதேஷ் பின்தொடரும் நிலை ஏற்பட்டது. எனினும், 2ஆவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி முடிவு செய்தது.

நேற்று - மூன்றாவது நாள் உணவு இடைவேளையின்போது, இந்திய அணி, 15 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்கள் எடுத்தது. ராகுல் 20, ஷப்மன் கில் 15 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

உணவு இடைவேளைக்கு பிறகு இந்திய அணி தொடர்ந்து நன்கு துடுப்பாட்டம் செய்து அதிக ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. அணித் தலைவர் கே. எல். ராகுல் 23 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஷப்மன் கில் 84 பந்துகளில் அரைச் சதம் எடுத்தார். அதன்பிறகு சற்று விரைவாக ஓட்டங்கள் எடுக்க ஆரம்பித்தார். அவருக்கு புஜாராவும் நல்ல இணையாக விளங்கினார்.

தேநீர் இடைவேளையின்போது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. ஷப்மன் கில் 80, புஜாரா 33 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள். இந்திய அணி 9 விக்கெட்கள் மீதமிருந்த நிலையில் 394 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு ஷுப்மன் கில்லும் புஜாராவும் விரைவாக ஓட்டங்கள் எடுக்க ஆரம்பித்தார்கள். பௌண்ட்ரி அடித்து 147 பந்துகளில் தனது முதல் டெஸ்ட் சதத்தை அடித்தார் ஷப்மன் கில். இதன்பிறகு 3 சிக்ஸர்கள், 10 பௌண்ட்ரிகளுடன் 110 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 87 பந்துகளில் அரைச் சதமெடுத்த புஜாரா, அதன்பிறகு இன்னும் வேகமாக ஓட்டங்கள் சேர்த்து ஆச்சரியப்படுத்தினார். 130 பந்துகளில் 13 பௌண்ட்ரிகளுடன் சதத்தை எட்டினார் புஜாரா. கடந்த 52 இனிங்ஸ்களில் அவர் எடுத்துள்ள முதல் சதம் இது. கடைசியாக ஜனவரி 2019இல் சதமடித்தார். இந்த இனிங்ஸில் கடைசி 43 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இந்திய அணி இரண்டாவது இனிங்ஸில் 61.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. புஜாரா 102, கோலி 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இதனால் முதல் டெஸ்டை பங்களாதேஷ் அணி வெற்றி பெற 513 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பதிலுக்கு இரண்டாவது இனிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இன்று போட்டியின் 4ஆம் நாள் ஆட்டமாகும்.

(ஐ)

# 2022இன் சிறந்த வீராங்கனையாக இகா ஸ்வியாடெக் தெரிவானார்!

லண்டன், டிசெ. 17

மகளிர் ரென்னிஸ் சங்கத்தின் (டபிள்யூ. ரி. ஏ.) 2022ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது போலந்தின் இகா ஸ்வியாடெக் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் சிறந்த ரென்னிஸ் வீரர், வீராங்கனைகளுக்கு டபிள்யூ. ரி. ஏ., ஏ. ரி. பி. சார்பாக விருதுகள் வழங்கப்படுவது வழக்கம்.



இந்நிலையில் 2022ஆம் ஆண்டுக்கான விருதுக்கு உலகின் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக் தெரிவாகியள்ளார். கடந்த 2020இல் புதிய அறிமுக வீராங்கனை விருதைப் பெற்றிருந்தார் ஸ்வியாடெக்.

தொடர்ந்து 37 போட்டிகளில் வென்று - 8 போட்டிகளில் சம்பியன் பட்டத்தை வென்றார். இதில் இரண்டு கிராண்ட்ஸ்லாம், டபிள்யூ. ரி. ஏ. 1000, 500 போட்டி தொடர்களின் பட்டங்களும் அடங்கும்.

(ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.